Vijey விஜய்

# விஜய்

12.02.2014 - மலர் 10, இதழ் 50





## 100 ஆம் வருடத்தில்

# பாம்பன் பாலம்

## நடுக்கடலில் திறந்து மூடும் சிறப்பு...

விலை ரூபா 15/-

ISSN 1391-9504

மாணவர்களுக்கான அறிவுசார் வாரப்பத்திரிகை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அவுஸ்திரேலியா

சமுத்திரத்தின் நடுவில் அமைந்துள்ள அவுஸ்திரேலியா பொதுநலவாய நாடுகள் அமைப்பினைச் சேர்ந்த ஒரு நாடாகும். அதனால், அங்கு பிரித்தானிய முடியாட்சியின் நிர்வாகமே நடைபெறுகின்றது. பெருங்கண்டமான அவுஸ்திரேலியா உலகின் ஆறாவது மிகப் பெரிய நாடாகும். அவுஸ்திரேலியக் கண்டமும் அதன்கீழ் மூலையில் உள்ள தஸ்மேனியாவும் சேர்ந்து அவுஸ்திரேலியா என்ற நாடு உருவாகியுள்ளது. 1606 இல் ஒல்லாந்தர்களால் இந்த கண்டம் கண்டுபிடிக்கப்பட்டது. 1770 இல் இந்நாடு ஆங்கிலேயர்கள் வசமானது. 1788 ஆம் ஆண்டு ஜனவரி 26 ஆம் திகதி முதல் இதனை 'புதிய தென் வேல்ஸ்' என்று அழைத்தனர். பின்னர் 1901 ஆம் ஆண்டு ஜனவரி முதலாம் திகதி முதல் அவுஸ்திரேலியா என்று அழைக்கப்பட்டது. அந்த நாட்டுக்கென பிரத்தியேக நாடாளுமன்ற முறை 1986 இல் மார்ச் மாதம் 3 ஆம் திகதி அறிமுகம் செய்யப்பட்டது.



அவுஸ்திரேலியாவில் விவசாய நடவடிக்கைகளுக்காகப் பயன்படுத்தப்பட்டுள்ள நிலப்பரப்பு சதுரகிலோமீற்றர் 4,172,880

கோதுமை, உற்பத்தி, பால் உற்பத்தி, காய்கறிகள் பழங்கள், பார்லி, கரும்பு, தோல் உற்பத்தி, கோழி வளர்ப்பு, மாடு வளர்ப்பு, மந்தை வளர்ப்பு என்பன பிரதான விவசாய நடவடிக்கைகளாகும்.

அவுஸ்திரேலியாவின் ஆதிக் குடிமக்களான அபோஜினியர்களின் வரலாறு சுமார் 45,000 ஆண்டுகளுக்கு முற்பட்டதாகும். வேட்டை அவர்களது பிரதான ஜீவனோபாயமாகும். அவர்கள் ஒன்றுக்கு ஒன்று மாறுபட்ட 250 மொழிகளைப் பேசினர் என்பது குறிப்பிடத்தக்கது.

### இனங்கள்




### மதம்

புரோட்டஸ்தாந்து - 27.4%
கத்தோலிக்கம் - 28.8%
கிழக்கு ஒத்தர்டோக்ஸ் - 2.7%
வேறு கிறிஸ்தவர்கள் - 7.9%
பௌத்தம் - 2.1%
முஸ்லிம் - 1.7%
பிரிக்க முடியாதவை - 11.3%
மதம் அற்றவர்கள் -18.7%
வேறு - 2.4%

### தேசிய விலங்கு பறவை, மலர்



கங்காருவும், கிவிட்பறவையும் அவுஸ்திரேலியாவின் தேசிய விலங்குகளாகும். மலர்- கோல்டன் விட்டில்






### பிராந்தியங்கள் பிரிவு 07

1. மேற்கு அவுஸ்திரேலியா
2. வட அவுஸ்திரேலியா
3. தென் அவுஸ்திரேலியா
4. குயின்ஸ்லாந்து
5. புதிய தென் வேல்ஸ்
6. விக்டோரியா
7. தஸ்மேனியா




### அரசியல்



பிரதமர் டொனி எபொட்

லிபரல் கட்சி

தொழில் கட்சி



எதிர்க்கட்சித் தலைவர் கெவின் ரட்



அவுஸ்திரேலிய நாடாளுமன்றக் கட்டடம்

### இயற்கை வளங்கள்

பொக்சைட், நிலக்கரி, பித்தளை, தகரம், தங்கம், வெள்ளி, யுரேனியம், நிக்கல், கனிமவளம், டங்கஸ்டன், ஈயம், நாகம், வைரம், இயற்கை வாயு, பெற்றோலியம்.

* உலகின் மிக பெரியளவிலான நிலக்கரி ஏற்றுமதி நாடு அவுஸ்திரேலியாவாகும்.

### தலைநகரம்



### பெரும் நகரம்







அபோஜினியர்கள், ஆசியர்கள் பிரித்தானியர்கள் கலந்த கலாசாரப் பண்புகள் அவுஸ்திரேலியாவில் உள்ளன.




பயன்படுத்தப்படும் பணஅலகு அவுஸ்திரேலிய டொலர்



'சிட்னி ஒபெரா ஹவுஸ்' பிரபல்யம் பெற்ற நடன நாடக கலை அரங்காகும்

# அமெரிக்காவில் வரலாறு காணாத குளிர்

அமெரிக்காவின் குளிர் மற்றும் வெப்பநிலை செல்சியஸில்...




ஆர்ட்டிக் குளிர்காற்று அலைகளினால் அமெரிக்காவில் பெரும்பாலான பகுதிகளில் அதிக குளிர் காலநிலை நிலவி வருகின்றது. இந்த அதிக குளிர் காரணமாக, இதுவரை 21 பேர் இறந்துள்ளனர். பாடசாலைகளும் மூடப்பட்டுள்ளன. துருவப்பகுதி காற்றுக் காரணமாக சுற்றுப்புறப்பகுதிகள் பனியால் மூடப்பட்டு ஐஸ்கட்டிகளாக மாறியுள்ளன. விலங்குகளும் இத்தகைய காலநிலையால் பெரிதும் அவதியுறுகின்றன. (படத்தில் அமெரிக்காவின் முக்கிய நகரங்களின் வெப்பநிலை தரப்பட்டுள்ளது.)



# விண்ணுக்கு சென்ற நத்தார் பரிசு

நத்தார் பரிசு கிடைப்பது என்பது பெரும் மகிழ்ச்சி தரும் விடயமாகும். எல்லைகள் அற்ற சூனியப்பகுதியான விண்வெளியில் பணியாற்றுபவர்களுக்கு நத்தார் பரிசு கிடைப்பது என்பது எதிர்பாராத மகிழ்ச்சியை ஏற்படுத்தும் விடயமாகவே அமைகின்றது. அண்மையில் தனியார் விண்வெளி ஓடங்கள் நிறுவனத்தினால் சர்வதேச விண்வெளி நிலையத்திற்குப் பொருட்களை விநியோகிக்கும் ஓடம் ஒன்று அனுப்பி வைக்கப்பட்டது. இந்த விண்ணோடம் விண்வெளி நிலையத்தினை மூன்று நாட்களுக்குப் பின்பு சென்றடைந்தது. வேர்ஜினியாவிலிருந்து ஏவப்பட்ட



இது சைக்னஸ் என்ற பொருட்கள் விநியோக விண்ணோடமாகும். இவ்வாறான ஓடம் ஏவப்பட்டது இது இரண்டாவது சந்தர்ப்பமாகும். கடந்த செப்டெம்பரில் முதலாவதாக இவ்வாறான ஓடம் ஒன்று ஏவப்பட்டது. இம்முறை இந்த ஓடம் 3000 றாத்தல் நிறையான பொருட்களை எடுத்துச் சென்றது. அதில் விசேடமான விடயமொன்றும் இருந்தது. அதுதான் நத்தார் பரிசுப் பொருட்களாகும். நத்தார் தினம் கடந்துவிட்டபோதிலும் விண்வெளி நிலையத்தில் பணியாற்றிக்கொண்டிருக்கும் ஆறு விண்வெளி வீரர்களுக்கு அவர்களின் குடும்பத்தினர் அனுப்பிய நத்தார் பரிசுகள் கிடைத்தன. நாஸா நிறுவனம் அவர்களுக்கு புதிய பழங்களையும் பரிசளித்தது. இவ்வாறு விண்வெளியில் பணிபுரியும் வீரர்களில் ஒரு ஜப்பானியரும், இரு அமெரிக்கர்களும், மூன்று ரஷ்யர்களும் அடங்குவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அழியும் அபாயத்தை எதிர்கொண்டிருக்கும் மாஷ்கோ பீரோ பழங்குடியினர்

**கடந்த 2007 ஆம் ஆண்டு வெளிநாட்டு செய்திச் சேவைகளிலும் இணையத்தளங்களிலும் வியப்பான சில புகைப்படங்கள் வெளியாகியிருந்தன. தென் அமெரிக்க நாடான பிரேசிலின் அரச நிறுவனமான 'தேசிய இந்திய மன்றம்' எனும் 'ஃபூனாய்' என்ற அமைப்பே இந்த புகைப்படங்களை வெளியிட்டிருந்தது. பிரேசில் மற்றும் அதன் அண்டை நாடான பேரு நாட்டிற்கு இடையில் அமைந்துள்ள அமேசன் மழைக் காட்டின் நடுப்பகுதியில், உலக மக்களிடமிருந்து ஒதுங்கி- தனித்து வாழும் 'அமெரிக்கன் இந்தியர்கள்' அல்லது 'அமெரிந்தி பழங்குடிக் கோத்திரத்தார்' பற்றிய புகைப்படங்களே ஊடகங்கள் வாயிலாக இவ்வாறு வெளியிடப்பட்டிருந்தன.**

பேரு நாட்டிற்குரிய அமேசன் வனாந்தரப்பகுதிகளிலேயே இந்த பழங்குடியினர் வசிக்கின்றனர். இவர்களே 'மாஷ்கோ பீரோ அமெரிந்தி பழங்குடியினர்' என்று அழைக்கப்படுவதாக பேரு நாட்டின் அதிகாரிகள் கூறுகின்றனர். பேரு நாட்டின் அமேசன் காடுகளுக்கு வருகை தரும் சுற்றுலாப் பயணிகள், சட்டவிரோத காடுகள் அழிப்பு செயற்பாடுகளில் ஈடுபடுவோர், எண்ணெய் ஆய்வாளர்கள் போன்றோர் இந்த பழங்குடியினரைக் கண்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. மாஷ்கோ பீரோ பழங்குடி கோத்திரத்தார் இன்றளவில் அழிந்துவரும் அபாயத்தினை எதிர்கொண்டுள்ள பழங்குடியினராகவே உள்ளனர். வெளிநபர்களிடமிருந்து இவர்களை ஒதுக்கி வைத்துப் பாதுகாப்பதென்பது, பேரு நாட்டு அதிகாரிகளுக்கு பெரும் சவாலாகவே உள்ளது.

## சூழலியலாளர்கள் சந்தித்த பழங்குடியினர்

2007 ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம், பிரேசிலின் ஃபூனாய் அமைப்பினதும் பிரித்தானியாவின் சர்வைவல் இன்டர்நெஷனல் அமைப்பினதும் சூழலியலாளர்களை உள்ளடக்கிய குழுவொன்று, ஹெலிகொப்டரில் பயணித்தவாறு பேரு மற்றும் பிரேசில் தேச எல்லையில் உள்ள அமேசன் மழைக்காட்டினை ஆய்வு செய்து கொண்டிருந்தது. இதன்போது, காட்டின் நடுப்பகுதியில் அமைக்கப்பட்டிருந்த சிறுகுடில்களை அக்குழுவினர் அவதானித்துள்ளனர். அந்தக் குடில்களுக்கருகில் ஏதோவொரு பழங்குடிக் கோத்திரத்தார் இருப்பதையும் அவர்கள் கண்டுள்ளனர். திடீரென அப்பகுதி வானில் தோன்றிய இந்த இயந்திரப் பறவையைப் பார்த்து அச்சமடைந்த அப்பகுதி வாழ் சில பழங்குடியினர், அடர்ந்த காட்டுப்பகுதிக்குள் ஓடி ஒளிந்துகொண்டதுடன், மேலும் சிலர் தம்வசம் வைத்திருந்த அம்புகளை ஹெலிகொப்டரை நோக்கி எய்தும் உள்ளனர். எனினும், அங்கிருந்த பழங்குடியினரைக் கண்டு மகிழ்ச்சியடைந்த சூழலியலாளர்களோ, அவர்களைப் புகைப்படம் எடுத்ததுடன், ஊடகங்கள் மற்றும் இணையத்தளங்களிலும் அவற்றை வெளியிட்டுள்ளனர். வெளிஉலக மனிதர்களுடன் ஒரு போதும் தொடர்பினைக் கொண்டிராத இவர்களே, மாஷ்கோ பீரோ பழங்குடியினராவர் என்று ஃபூனாய் அமைப்பு இதன் பின்புதான் இனங்கண்டு கொண்டது. மாஷ்கோ பீரோ அமெரிந்தி பழங்குடியினரைப் பாதுகாக்கும் முகமாகவே, இந்த ஃபூனாய் அமைப்பினை பிரேசில் அரசாங்கம் ஸ்தாபித்திருந்தது.

"நாம் வான்பரப்பில் இருந்தே இந்த பழங்குடிக் கோத்திரத்தாரைப் படம் எடுத்தோம். பழங்குடியினர் இங்கு வசிக்கின்றனர் என்பதை நிரூபிப்பதே எமது நோக்கமாகும். அவர்களின் வாழ்க்கைக்கு இடையூறுகளை ஏற்படுத்துவது எமது நோக்கமன்று. இப்பகுதியில் திருட்டுத்தனமாகப் பாரியளவில் நடைபெறும் மரம் வெட்டும் செயற்பாட்டினால் இப்பழங்குடியினரின் வாழ்க்கை, இருப்பு என்பன பாதிக்கப்படுகின்றன.தற்போது அவர்கள் அழிந்து போகும் அபாயத்திற்கு ஆளாகியுள்ளனர்" என்று மாஷ்கோ பீரோ

(20ஆம் பக்கம் பார்க்க)

விஜய்
விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்
08, ஹுணுப்பிட்டிய குறுக்கு வீதி,
கொழும்பு - 02
தொலைபேசி: 2479653,
மின்னஞ்சல்: vijey@wijeya.lk



விசேட தபால் மூல ஆங்கிலப் பாடநெறி
DIPLOMA IN ENGLISH கிலாஸ் போகாமலே இங்லீஸ் படிக்கலாம்.
நீங்கள் இருக்கும் இடத்தில் இருந்து கொண்டே எம்முடன் இணைந்து எளிய நடையில் தமிழ் மூல விளக்கத்துடன் ஆங்கிலம் படிக்கலாம்.
மேலதிக விபரங்களுக்கு முழுப்பெயர் ,முகவரியைக் குறிப்பிட்டு 0773-123 523 க்கு SMS செய்யுங்கள்.
பாடநெறியில் இணையும் அனைவருக்கும்
@- 10 பாடத்தொகுதிகள் தமிழ் விளக்கத்துடன்
@- ஆங்கில பேச்சுப்பயிற்சி / உரையாடல் வீடியோ சீடி 1 ஒன்று
@- Video CD வழிகாட்டி புத்தகம் ஒன்று.
@- அழகிய கைக்கடிகாரம் ( Watch ) ஒன்று./ மாணவர் அடையாள அட்டை
@- Diploma in English சான்றிதழ் ஒன்று என்பன வழங்கப்படும்.
மேலதிக விபரங்கள் தபால் மூலம் அனுப்பி வைக்கப்படும்.
பாடநெறிக்கட்டணம். ரூபா 1600/= மாத்திரம் அறவிடப்படும். மாற்றுக்கட்டணம் இல்லை.
UNION EDUCATIONAL INSTITUTE
P.O. BOX 143, KANDY, SRI LANKA. CALL: 081-222 77 11 / 0773 123 523

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முழுப் பூசணிக்காய்!



பண்ணையார் பரமசிவனின் நிலத்திற்குப் பக்கத்தில்தான் பரோபகாரி பழனியின் நிலமும் இருந்தது. பண்ணையார் தனது நிலத்தில் கத்தரி, வெண்டி, தக்காளி போன்ற காய்கறி வகைகளைப் பயிரிட்டிருந்தார். பழனி தன் நிலத்தில் பூசணிக்காய்களைப் பயிரிட்டிருந்தான். பண்ணையாரின் காய்கறித் தோட்டத்தில் ஒரு செடியிலும் ஒரு பூக்கூடப் பூக்கவில்லை. அங்குள்ள பல செடிகள் கருகிக் கிடந்தன.

பழனியின் நிலத்தில் பூசணிக்காய்கள் சாம்பல் வண்ணத்தில் பிரமாதமாகக் காய்த்து, தோட்டம் முழுவதும் வியாபித்திருந்தன. அதைப் பார்க்கப் பார்க்க பண்ணையாருக்கு கோபம் கொந்தளித்துக்கொண்டு எழுந்தது. ஏதாவது செய்தே ஆக வேண்டும் என்று உள்ளம் துடித்தது. ஒருநாள் பண்ணையார் தன் நிலத்தின் வரப்பின்மீது நின்று சுற்றும் முற்றும் பார்த்தார். கண்ணுக்கெட்டிய தூரம் வரை ஆள் அரவமே இல்லை.

பண்ணையார், பழனியின் நிலத்தில் இறங்கினார். ஒரு பெரிய பூசணிக்காயை லாவகமாகப் பறித்து, மேல் துண்டால் மறைத்து எடுத்து வந்து, சாலையில் நிறுத்தி வைக்கப் பட்டிருந்த தன் மாட்டு வண்டியில் வைத்தார். களைப்புடன் முகத்தை துடைத்துக்கொண்டு நிமிர்ந்தவர் அதிர்ந்துவிட்டார்.

அந்த அதிர்ச்சிக்குக் காரணம் பரதேசிப் பெருமாள்தான். யாரும் பார்க்கவில்லை என்ற துணிச்சலில், பழனியின் தோட்டத்திலிருந்து தான் ஒரு முழுப் பூசணிக்காயை திருடி வந்ததை, இந்தப் பரதேசிப் பெருமாள் பார்த்துவிட்டான் என்பதை பண்ணையார் அப்போதுதான் உணர்ந்தார்.

பரதேசிப் பெருமாள் ஒவ்வொரு ஊரிலும் ஒருவாரம் தங்கி இருந்து பிச்சை எடுத்து உண்பவன். எட்டாவது நாள் அடுத்த ஊருக்குப் புறப்பட்டு விடுவான். இப்படி ஒவ்வொரு ஊராக சுற்றிச் சுற்றி வருவதாலேயே பொருமாளின் பெயருக்கு முன்னால் பரதேசி என்ற அடைமொழி ஒட்டிக்கொண்டுவிட்டது.

"இந்தப் பரதேசிப் பயல் ஊருக்குள் சென்று, நான் பழனியின் தோட்டத்திலிருந்து ஒரு பூசணிக்காயைத் திருடி விட்டதாக யாரிடமாவது உளறிக் கொட்டி விட்டால், தன் மானம், மரியாதை என்ன ஆவது என்ற கிலி அவருக்குப் பிடித்துக் கொண்டது. அந்தப் பரதேசியிடம் சென்று யாரிடமும் சொல்லாதே என்று சொல்ல முடியாது. அப்படிச் சொன்னால் அது இன்னும் விபரீதம். பண்ணையார் ஒரு முடிவுக்கு வந்தவராய், வண்டியில் ஏறி அமர்ந்தார்.

பண்ணையாரின் வண்டி விரைவதையே பார்த்துக் கொண்டு மரத்தடியிலேயே நின்றுகொண்டிருந்தான் பரதேசி. அவன், 'பண்ணையார் ஒரு பூசணிக்காயைத் திருடி விட்டார் என்று சொன்னால் ஊரில் யாராவது நம்புவார்களா? நீ பொய் சொல்கிறாய் என்று நமக்குக் கிடைக்கும் பிச்சை நின்று போனால் நாமல்லவா பட்டினி கிடக்க வேண்டும். அதுவும் ஒருவாரம் இந்த ஊரில் இருந்தாக வேண்டுமே! சரி, கடவுள் விட்டவழி, வாயை மூடிக்கொண்டு மௌனமாக நாம் வந்த வேலையை மட்டும் பார்ப்போம்' என்று முடிவெடுத்து பரதேசிப் பெருமாள், மெதுவாக ஊருக்குள் நுழைந்தான்.

அங்கே முச்சந்தியில் பண்ணையார் வீட்டு வேலைக்காரன் நின்றுகொண்டு, "இதனால் சகலமானவர்களுக்கு தெரிவிப்பது என்னவென்றால், இன்று முதல் நான்கு நாட்களுக்கு ஊரில் உள்ள அனைவருக்கும் பண்ணையார் விருந்து கொடுக்கிறார். அனைவரும் தவறாமல் வந்து விருந்து சாப்பிட வேண்டும். இது பண்ணையார் உத்தரவு" என்று அறிவித்துக் கொண்டிருந்தான்.

ஊர் மக்கள் ஒருவரை ஒருவர் குழப்பத்தோடு பார்த்துக்கொண்டனர். "ஏன் பண்ணையார் திடீர் என்று ஊர் மக்களுக்கு விருந்து கொடுக்கிறார்" என்று ஒருவரை ஒருவர் பார்த்துக் கேட்டுக்கொண்டனர். யாருக்கும் ஒன்றும் புரியவில்லை. பரதேசிப் பெருமாள் மட்டும் பூடகமாக மனதிற்குள் சிரித்துக் கொண்டான். பண்ணையார் வீட்டுக்குச் சென்று வயிறு நிறைய விருந்து சாப்பிட்டு விட்டு வந்தனர்.

பரதேசிப் பெருமாள் மட்டும் அந்தப்பக்கமே தலைகாட்டவில்லை. ஒவ்வொரு நாளும் விருந்துக்குப் போகாது தெருவில் பிச்சையெடுத்து உண்டான். பரதேசி அந்த ஊரிலிருந்து அடுத்த ஊருக்குப் புறப்பட்டுப் போகும்போது, வழியில் பண்ணையார் எதிர்ப்பட்டார். பண்ணையாரைப் பார்த்ததும் பரதேசிக்கு சிரிப்பு பொங்கிக்கொண்டு வந்தது. குலுங்கிச் குலுங்கிச் சிரித்தான்.

பண்ணையார், "ஏண்டா பரதேசி! ஏன் என்னைப் பார்த்துச் சிரிக்கிறாய்?" என்று கேட்டார். "இல்லை! ஒரு முழுப் பூசணிக்காயை திருடிவிட்டு, அதை சோற்றைப் போட்டு மறைத்திருக்கும் உங்களைப் பார்த்து சிரிக்காமல் என்ன செய்வது?" என்றான் பரதேசி. பண்ணையார் அதிர்ச்சியில் உறைந்து போனார்.


---

# உயர்ந்த எண்ணம்

முன்னொரு காலத்தில் குரு ஒருவர் தனது சீடர்களுடன் வசித்து வந்தார். திடீரென ஒருநாள் அவர் அரசாங்க காவலர்களால் கைது செய்யப்பட்டார். இதனை அறிந்த அவரது சீடர்கள் அதிர்ந்து போயினர். எவ்வளவு சிறந்த ஞானி! அவரா இப்படி? ஒருக்காலும் இருக்காது. இது ஏதோ வீண்பழி! என்றுதான் அவர்கள் நினைத்தனர். ஆனால், விசாரணையில், அந்தக் குரு தானே முன் வந்து தனது குற்றத்தை ஒப்புக்கொண்டார்.

வேறு வழியின்றி நீதிபதியும் அவருக்கு சிறைத் தண்டனையை விதித்துவிட்டார். சிறிது காலத்தின் பின் சிறைத் தண்டனை முடிந்து வெளியே வந்த குரு பின்னர் வேறு ஒரு குற்றத்திற்காக மீண்டும் சிறை புகுந்தார். இவ்வாறு அடிக்கடி சிறு சிறு குற்றங்கள் புரிவதும், சிறைச்சாலைக்கு அடிக்கடி செல்வதும் அவரது வழக்கமாகிவிடவே, அவரைச் 'சிறைச்சாலைக் குரு' என்றே மக்கள் அழைக்க ஆரம்பித்தனர்.இதனால் மனம் கலங்கிய சீடர்கள்,

"குருவே! உங்களுக்கு என்ன வேண்டும்? சொல்லுங்கள். கொண்டு வந்து குவிக்கிறோம். ஏன் இப்படித் திருட வேண்டும்? அதுவும் சிறிய சிறிய பொருட்களான போர்வையும், குடையும் பாதுகைகளும் நீங்கள் திருடக் கூடிய பொருட்களா?" என்று கேட்பார்கள். அந்தச் சமயங்களில் குரு, சிரித்து விட்டு பேசாமல் இருந்து விடுவார். 'சரி இது ஒரு வகை மனோ வியாதி போலும்' என்று முடிவு கட்டினார்கள் சீடர்கள்.



சிறிது காலத்தின் பின் குருவுக்கு மிகவும் வயதாகிவிட்டது. உடல் தளர்ந்து படுத்த படுக்கையானார். ஒருநாள், அவரைச் சுற்றிச் சீடர்கள் கூடினர். "இப்போதாவது உண்மையைச் சொல்லுங்கள் குருவே! எதற்காக அப்படிச் செய்தீர்கள்?" என்று சீடர்கள் கேட்டனர்.

"அப்பா! நீங்களெல்லாம் நாகரிக உலகில் வாழ்பவர்கள். உங்களுக்கு நல்ல வழிகாட்ட என்னைப் போல் ஏராளமானவர்கள் உள்ளனர். ஆனால், சிறையிலிருப்பவர்களுக்கு யாரிடமிருந்தாவது உபதேசம் பெறவோ, அதன்மூலம், நற்கதி அடையவோ வழி இல்லை! அதனால்தான் அடிக்கடி நான் சிறை சென்றேன்" என்றார் குரு.

"இப்போது போய்ப் பாருங்கள். அங்குள்ளவர்களில் பெரும்பாலானவர்கள் திருந்தி நல்வழிப்பட்டுவிட்டனர். என்னை விசாரித்த நீதிபதி நல்லவர். ஒவ்வொரு முறையும் எனக்கு ஆறு மாதத்திற்குக் குறையாமல் தண்டனை கொடுத்தார். அதனால்தான் என் பணியைச் சிறப்பாக என்னால் செய்ய முடிந்தது" என்று கூறிவிட்டு 'ஞானிக்குச் சிறையும் குருகுலம்தான்' என்றார்.

குருவின் இந்தச் செயல் சீடர்கள் மனதை மிகவும் உருக்கியது. அவரது உயர்ந்த எண்ணத்தைப் புரிந்துகொண்ட சீடர்கள் குருவுக்கு உண்மையான அன்போடு தொடர்ந்து தமது தொண்டுகளை செய்து வந்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2013, தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்தோர்



எம்.முஸ்ஹப், 180 புள்ளிகளைப் பெற்றுள்ளார். க/எனசல் கொல்ல மத்திய கல்லூரி மாணவனான இவர், மாலிக்-ஸீனியா தம்பதியரின் புதல்வராவார்.



ஏ.ரஹீம், 157 புள்ளிகளைப் பெற்றுள்ளார். இ/அல்-மக்கியா மு.ம. வித்தியாலய மாணவனான இவர், அப்துல் ரஹ்மான்-சபீயா பீபி தம்பதியரின் புதல்வராவார்.



எஃப்.அப்ரா, 151 புள்ளிகளைப் பெற்றுள்ளார். கு/அத்தாரிக் மு.ம.வித்தியாலய மாணவியான இவர், பாஹிம்-ஜினூபா தம்பதியரின் புதல்வியாவார்.



மட்/மம/பதுரியா நகர் அல்-மினா வித்தியாலய மாணவியான ஆர்.றுமைஸா, 120 புள்ளிகளைப் பெற்றுள்ளார். இவர், றபீக்-ஜெஸ்மியா தம்பதியரின் புதல்வியாவார்.



மட்/மம/பதுரியா நகர் அல்-மினா வித்தியாலய மாணவியான எஃப்.நஸ்ரின், 140 புள்ளிகளைப் பெற்றுள்ளார்.



மடவளை, அல்-முனவ்வரா ஆரம்ப பாடசாலை மாணவனான அஷ்பாகுல் இலாஹி, 163 புள்ளிகளைப் பெற்றுள்ளார். இவர், அன்சார்-பரீஸா தம்பதியரின் புதல்வராவார்.

## பது/பட்டாவத்த தமிழ் வித்தியாலயம்



என்.கவிஸ்ணா, 136 புள்ளிகளைப் பெற்றுள்ளார்.



எஸ்.தயாகரன், 119 புள்ளிகளைப் பெற்றுள்ளார். இவர், செல்வகுமார்-பிரபாவதி தம்பதியரின் புதல்வராவார்.



வி.நவீன்மதுஷான், 111 புள்ளிகளைப் பெற்றுள்ளார்.



எஸ்.கரிஸ்மாதேவி, 79 புள்ளிகளைப் பெற்றுள்ளார்.



டினோ மெல்டன், 76 புள்ளிகளைப் பெற்றுள்ளார்.

எஸ்.ரதுர்ஷன், 89 புள்ளிகளைப் பெற்றுள்ளார்.

எம்.காயத்திரி, 71 புள்ளிகளைப் பெற்றுள்ளார்.

## கிரி/வன்னிகுடாவெவ முஸ்லிம் வித்தியாலயம்



டி.சுமையா, 171 புள்ளிகளைப் பெற்றுள்ளார்.



எஃப்.அப்ரா, 165 புள்ளிகளைப் பெற்றுள்ளார்.



எம்.அமீன், 157 புள்ளிகளைப் பெற்றுள்ளார்.



ஏ.அஜாஸ், 156 புள்ளிகளைப் பெற்றுள்ளார்.

எஃப்.ரஹ்மானியா, 92 புள்ளிகளைப் பெற்றுள்ளார்.

# கண்ணீரை வரவழைக்காத வெங்காயம்



கண்ணீரை வரவழைக்காத வெங்காய வகையொன்றை அமெரிக்க விஞ்ஞானிகள் குழுவொன்று உருவாக்கியுள்ளது. பொதுவாக வெங்காயத்தை வெட்டும் போதோ அல்லது உரிக்கும்போதோ எமக்கு கண் எரிவு, கண்ணீர் என்பன ஏற்படும். வெங்காயத்தை வெட்டும்போது அதில் நிகழும் வேதியியல் மாற்றங்களுக்கமைய,



கலாநிதி கொலின் சி.ஈடி, தமது கண்டுபிடிப்புடன் காணப்படுகின்றார்.



வெங்காயத்திலிருந்து வெளிப்படும் Propenesulfenic அமிலமானது, எளிதில் ஆவியாகி, காற்றில் கலந்து நம் கண்களை அடைகின்றது. இதன் விளைவாகவே, கண் எரிவு மற்றும் கண்ணீர் ஏற்படுகின்றன.

ஆனால், இந்த புது வகை வெங்காயத்தை வெட்டும்போது, கண் எரிவு மற்றும் கண்ணீர் என்பன ஏற்படாதென, இந்தக் கண்டுபிடிப்பை நிகழ்த்தியுள்ள ஆராய்ச்சிக் குழுவுக்குத் தலைமை தாங்கும் கலாநிதி கொலின் சி.ஈடி தெரிவித்துள்ளார். அதற்கமைய, வெள்ளைப்பூண்டில் அடங்கியுள்ள கந்தக சேர்வையைக் கொண்டு கண்ணீரை வரவழைக்காத இந்த புது வகை வெங்காயம் உருவாக்கப்பட்டுள்ளதாக குறித்த விஞ்ஞானிகள் குழு தெரிவித்துள்ளது.



அத்துடன், பூண்டில் காணப்படுகின்ற சில மருத்துவ குணங்களும் அதாவது இருதய நோய்கள் ஏற்படாமல் தடுத்தல், உடல் எடை அதிகரிப்பதைத் தடுத்தல், குருதியை சுத்திகரிக்கும் தன்மை போன்ற மருத்துவ குணங்கள் இந்த புதிய வகை வெங்காயத்தில் அடங்கியிருப்பதாக கலாநிதி கொலின் மேலும் தெரிவித்துள்ளார். இந்த வெங்காயம் எப்போது சந்தைக்கு வரும் என்பது தொடர்பில் இதுவரை அறிவிக்கப்படவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வட அமெரிக்

வட அமெரிக்கா சுமார் 24 மில்லியன் சதுர கிலோமீற்றர் வரை விசாலமானது. இது உலக நிலப்பரப்பில் 100 இற்கு 16 என்ற அளவைக் கொண்டது. உலக உயிரினங்களின் இருப்பில் வட அமெரிக்கா மூன்றாவது இடத்தை வகிக்கின்றது. முதலிடத்தில் ஆபிரிக்காவும் இரண்டாம் இடத்தில் ஆசியாவும் உள்ளன. அந்தவகையில், நாம் வட அமெரிக்காவில் உள்ள சில அபூர்வ விலங்குகள் பற்றிய சில விபரங்களை அறிந்துகொள்வோம்.

வட அமெரிக்காவின் அபூர்வ விலங்குகளிடையே றொகீ மலை ஆடுகளும் வெள்ளாடுகளும் எண்டிலொப்களும் பிரசித்தமானவையாகும். வட அமெரிக்காவின் துருவப்பகுதிகளில் வாழும் விலங்கினங்களில் பனிக்கரடிகளும் சீல் விலங்கும் குறிப்பிடத்தக்கவை. தெற்குப் பகுதிக் காடுகளில் லெமிங், கருங்கரடி போன்ற விலங்குகள் வாழ்கின்றன.அத்துடன், கெரிபூ மற்றும் மூஸ் போன்ற மானினங்களையும் இப்பகுதிகளில் காணலாம். வட அமெரிக்காவில் அதிகம் காணக்கிடைக்கின்ற ஒரு விலங்கினமாக மூஸ் மான்களைக் குறிப்பிடலாம். வட அமெரிக்காவின் பாலைவனப்பகுதிகளில் பாலைவன குள்ளநரி, கங்காரு எலி, ஆர்மடில்லோ, விஷப் பாம்புகள் மற்றும் விஷ ஜந்துக்கள் என்பனவும் உள்ளன. எப்பலேச்சியன் மலைத்தொடர் பகுதியில் பல்வேறு மான் இனங்கள், லின்க்ஸ் காட்டுப் பூனைகள், ஸ்கன்க் ஆகிய விலங்குகளையும் காணலாம்.

## ரெகூன் (Raccoon)



* அறிவியல் பெயர்: *Procyon lotor*

வட அமெரிக்காவின் காட்டுப்பகுதிகளிலுள்ள இந்த அபூர்வ விலங்கினத்தை அங்குள்ள மக்கள் 'கூன்' என்றே அழைக்கின்றனர். காட்டுப்பகுதியிலுள்ள நீர்நிலைகளில் வாழும் தவளைகளையும் சிறிய மீன்களையும் இவை இரையாகக் கொள்கின்றன. கூட்டில் அடைக்கப்பட்டிருக்கும் ரெகூனிற்கு உணவு வழங்கப்பட்டாலும், அது அந்த உணவை நீரில் அமிழ்த்தி எடுத்தே உட்கொள்ளும்.

## றொகீ மலை ஆடு (Rocky Mountain Goat)

* அறிவியல் பெயர்: *Oreamnos americanus*

வருடம் முழுவதும் வெள்ளை ரோமங்களைக் கொண்டிருக்கும் ஒரேயொரு செம்மறியாட்டு இனம் இதுவாகும். வட அமெரிக்காவிலிருந்து அலஸ்கா வரையுள்ள றொகீ மலைத்தொடர் பகுதிகளில் இவை வசிக்கின்றன. இவை அதிகமாக வேட்டையாடப்படுகின்ற ஒரு விலங்கினம் என்பதால், தற்போதளவில் விலங்குகள் காப்பகங்களிலேயே இவற்றை பெரும்பாலும் காணக்கிடைக்கின்றது.



## எல்க் மான் (Elk)



* அறிவியல் பெயர்: *Cervus canadensis*

வட அமெரிக்காவின் மேற்குப்பகுதியில் காணப்படும் பெரிய மான் இனமாகும். தோற்றத்தில் ஐரோப்பாவின் சிவப்பு மானைப் போன்றிருக்கும். கோடை காலத்தில் மலைப்பகுதிக் காடுகளில் எல்க் மான்களைக் கூட்டம் கூட்டமாகக் காணலாம். குளிர்காலம் நெருங்கியதும் அவை கூட்டமாகப் பள்ளத்தாக்கை நோக்கிச் சென்றுவிடும்.

இதில் பெண் மான்கள் மே அல்லது ஜூன் மாதத்தில் குட்டிகளை ஈனும். ஈன்றெடுக்கும் குட்டிகளின் பழுப்பு நிற உடலில், வெள்ளைப் புள்ளிகள் காணப்படும். குட்டியின் உடல் வளர்ச்சியடையும் போது, அந்த வெள்ளைப் புள்ளிகள் மறைந்துவிடும். வளர்ச்சியடைந்த ஆண் மானின் வலிமையான கொம்புகள் ஐந்து அடி உயரம்வரை வளரும்.



## மூஸ் மான் (Moose)

* அறிவியல் பெயர்: *Alces alces*

வட அமெரிக்காவில் இந்த மான் இனத்தை 'மூஸ்' என்றும் ஐரோப்பாவில் இதனை 'யுரேஷியன் எல்க்' என்றும் அழைப்பர். கெனடா மற்றும் அலஸ்கா பகுதிகளில் சதுப்பு நிலங்கள், ஏரிகளை அண்டியே மூஸ் மான்கள் வசிக்கின்றன. கோடை காலத்தில் மூஸ் மானினத்தின் பிரதான உணவு நீர்த்தாவரங்களாகும். குளிர்காலத்தில் சிறிய செடிகளை உணவாகக் கொள்ளும். வளர்ச்சியுற்ற ஆண் மான்கள் 7 முதல் 8 அடி வரையான உயரத்தைக் கொண்டிருக்கும். அத்துடன், இவற்றுக்கு 6 அடி வரையான கொம்புகள் இரண்டு காணப்படும். தற்காலத்தில் இந்த மானினத்தை அரிதாகவே காணக்கிடைக்கின்றது. இவற்றை வட அமெரிக்காவிலும் ஐரோப்பாவிலும் மட்டுமல்ல- வட ஆசியாவிலும் காணலாம்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காவின் அபூர்வ விலங்குகள்



## கெரிபூ (Caribou)

* அறிவியல் பெயர்: *Rangifer tarandus*

இது ஒருவகைக் கலைமான் ஆகும். தோற்றத்தில் வட ஐரோப்பிய பனிமானைப் போன்று காணப்படும். வட அமெரிக்காவின் முனைப்பகுதிகளிலும் மலைப்பகுதிகளிலும் பனியினால் மூடப்பட்ட பகுதிகளிலும் இந்த மான்களைக் கூட்டம் கூட்டமாகக் காணலாம். இவை வேட்டையாடப்பட்டு வருவதால் அரிதாகி வரும் ஒரு மான் இனமாகக் கருதப்படுகின்றது. இந்த கெரிபூ மான் இனத்தின் ஆண்-பெண் என இரு இனத்திற்கும் கொம்புகள் உள்ளன.



## லெமிங் (Lemming)

* அறிவியல் பெயர்: *Lemmus lemmus*



வட அமெரிக்காவின் குளிர் பிரதேசங்களில் இவற்றைக் காணலாம். இந்த மிகச்சிறிய உயிரினத்தின் உடல் பழுப்பு நிறமுடையது. கூட்டமாகச் சேர்ந்திருக்கும்போது ஆறு, ஏரிகளில் நீந்திச் செல்லும்.

## ஸ்கன்க் (Skunk)

* அறிவியல் பெயர்: *Mephitis mephitis*

பலவகை ஸ்கன்க்கள் இருக்கின்ற போதும் கறுப்புக் கோடு உள்ளதே விசேடமானதாகும். ஸ்கன்க்களை வட அமெரிக்காவில் மட்டுமே காணலாம். எதிரிகளைச் சந்தித்தால் தற்பாதுகாப்புக்காக கொடூரமாக உடலை சிலிர்த்துக்கொண்டு சண்டைக்குத் தயாராகும். அப்போது வாலின் இரு புறங்களிலிருந்தும் நாற்றத்துடன்கூடிய ஒருவகைத் திரவத்தை எதிரியின்மீது பீய்ச்சியடிக்கும். இந்த திரவமானது எதிரியின் கண்ணில் பட்டால், அதன் கண்களின் பார்வைத் திறன் சிறிது நேரத்திற்கு மங்கிவிடும்.



## லின்க்ஸ் (Lynx)

* அறிவியல் பெயர்: *Lynx rufus*

காட்டுப் பூனை வகையைச் சேர்ந்த இவை, வட அமெரிக்க மலைப்பகுதிகளில் வசிக்கின்றன. முன்னர் ஐரோப்பாவிலும் லின்க்ஸ் விலங்கினம் காணப்பட்டது. இப்போது அவற்றைக் காண்பது அரிது. பெருமளவில் வேட்டையாடப்படுவதே இதற்கான காரணமாகும்.

ஏ.ஜே.எம்.நிழாம்

## அமெரிக்கன் பீவர் (American beaver)

* அறிவியல் பெயர்: *Castor canadensis*


வட அமெரிக்காவில் காணக்கிடைக்கின்ற அருகிவரும் நிலைக்கு முகம்கொடுத்திருக்கும் இரண்டு பீவர் வகைகளில், அமெரிக்கன் பீவரும் ஒன்றாகும். வளர்ச்சியடைந்த பீவர், 12 முதல் 27 கிலோ கிராம் வரையான நிறையில் இருக்கும். ஏரி, குளம், ஓடை, ஆறு ஆகிய நீர்நிலைகளுக்கு அருகே இருக்கும் பீவர்கள், தமது கூரிய பற்களால் அப்பகுதியில் உள்ள மரத்தைக் கொரித்து வீழ்த்தி-வேலி போன்று அமைத்து நீரை மறிக்கும். பின்னர், அந்த வேலிக்குள்ளே இது வாழும். இதுவொரு தாவர உண்ணியாகும்.



## அமெரிக்கன் பைசன் (American bison)

* அறிவியல் பெயர்: *Bison bison*

அமெரிக்கன் பைசன் ஆனது, வட அமெரிக்காவில் வசிக்கும் பெரிய விலங்கினமாகும். 19 ஆம் நூற்றாண்டில் தோலுக்காகவும் மாமிசத்துக்காகவும் இவை அதிகளவில் வேட்டையாடப்பட்டன. எனவே, வேகமாக அழிவைச் சந்தித்து வந்த இந்த விலங்கினத்தைக் காக்கவென அமெரிக்க அரசு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.



## அமெரிக்கன் கருங்கரடி (American Black Bear)

* அறிவியல் பெயர்: *Ursus americanus*

வட அமெரிக்காவின் காடுகளில் இவற்றை அதிகம் காணலாம். இவற்றில் பெரும்பாலானவை கறுப்பு நிறத்தில் காணப்பட்டாலும், வேறு நிறங்களிலும் உண்டு. கொடிய விலங்கினம் போன்று காணப்பட்டாலும், இது அவ்வாறன்று. தேசிய வனக் காப்பகங்களில் வசிக்கும் கருங்கரடிகள், அங்கு வரும் உல்லாசப்பயணிகளிடமிருந்து உணவுகளை வாங்கி உண்ணும் பழக்கத்தைக் கொண்டிருக்கின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தரம் - 5 பகுதி - I (சென்றவாரத் தொடர்ச்சி)

பெயர்: ....................................................

08) தரம் 5 கணிதப் புத்தகத்தை விரிக்கும்போது, இடது கைப் பக்கம் 84 ஆக இருந்தது. அடுத்த பக்கத்தை விரிக்கும்போது வலது கைப் பக்கம் இருக்கும் பக்கம் யாது?

1. 87 2. 86 3. 85

09) கமலாவின் வீட்டில் 36 மாம்பழங்கள் இருந்தன. அதில் 12 மாம்பழங்கள் அழுகிவிட்டன. எனின், அழுகிய மாம்பழங்கள் மொத்த மாம்பழங்களின் என்ன பங்கு?

1. $\frac{5}{6}$ 2. $\frac{1}{36}$ 3. $\frac{1}{3}$

10) ______________________ அருகில் உள்ள கோட்டின் நீளம் யாது?

1. 5cm 2. 7cm 3. 6cm

11) சிறுவன் ஒருவன் மேற்கு நோக்கி நின்று இரு கைகளையும் நீட்டி நின்றால், அவனது வலது கைப் பக்கம் எத்திசையாயிருக்கும்?

1. வடக்கு 2. தெற்கு 3. கிழக்கு

12) பின்வருவனவற்றில் செங்கோணமுள்ள எழுத்துக்கள் எவை?

1. LNV 2. TLW 3. LTH

13) நாணயத்தாள்களில் பெறுமதி கூடிய நாணயத்தாள் எது?

1. ரூபா 2000 2. ரூபா 5000 3. ரூபா 1000

14) ஒரு வண்டியில் 15 பேர் பயணம் செய்ய முடியுமாயின், 50 பேர் பயணம் செய்ய எத்தனை வண்டிகள் தேவை?

1. 4 2. 5 3. 3

15) மூன்று பக்கங்களைக் கொண்ட தளவடிவம் பின்வருவனவற்றுள் எது?

1. முக்கோணம் 2. சதுரம் 3. செவ்வகம்

16) இரண்டாவது முக்கோண எண் மூன்று எனின், நான்காவது முக்கோண எண் யாது?

1. 10 2. 6 3. 25

17) பின்வருவனவற்றுள் சதுர எண் என நீர் கருதுவது;

1. 10 2. 25 3. 20

18) 450 சதுர சென். மீற்றர் பரப்பளவுள்ள கேக் துண்டில் இருந்து 100 சதுர சென்.மீற்றர் கேக் துண்டை வெட்டி எடுத்த பின் மிகுதிக் கேக் துண்டின் அளவு யாது?

1. $350cm^2$ 2. $550cm^2$ 3. $300cm^2$

19) உமது வயது 10 எனின், அத்துடன் 3 ஐ பெருக்கி 5ஐ கழித்தால் வரும் விடை யாது?

1. 25 2. 35 3. 18

20) 7l பாலுள்ள பாத்திரத்தில் 250ml பாலையும் 750ml பாலையும் மேலும் சேர்க்கும்போது அதிலுள்ள பாலின் அளவு யாது?

1. 7l 750ml 2. 7l 250ml 3. 8000ml




21) பின்வரும் கூற்றுகளில் சரியானது எது?

1. சோயா அவரை மரக்கறி இனமாகும். இது புரதம் நிறைந்த உணவாகும்.
2. கறிவேப்பிலை மிகவும் பிரயோசனமான தாவரம். எனினும் முள் நிறைந்தது.
3. மாம்பழம் விற்றமின் C நிறைந்த ருசியான பழமாகும். இது எல்லா பகுதிகளிலும் சிறப்பாக விளையும்.

22) 1. வாழை நல்ல பழமாகும். அதில் பல இனங்கள் உள்ளன.
2. சோயா சத்துள்ள உணவு ஆகும். எனினும், கொழுப்பு நிறைந்தது.
3. நெல் மூலம் எமது பிரதான உணவு கிடைக்கிறது. இது வயலில் மட்டும் வளரும்.

23) பொய்கை என்ற சொல்லிற்கு ஏற்ற சொல் எது?

1. குளம் 2. மலர் 3. ஆறு

24) மலைநாட்டில் சிறப்பாக வளரக்கூடிய மரக்கறிவகை;

1. வெண்டி 2. கெரட் 3. முருங்கை

25) பின்வருவனவற்றுள் பொருந்தாத சொற்தொகுதி எது?

1. வெண்டிக்காய், பாகற்காய், கத்தரிக்காய்
2. மாம்பழம், பலாப்பழம், வாழைப்பழம்
3. கடலை, பருப்பு, அவரை, வற்றாளை

26) மட்டப்பலகையை பயன்படுத்துபவர்;

1. கடற்றொழிலாளி 2. விவசாயி 3. தச்சன்

27) நீர் இல்லாத பகுதிகளில் சூரிய ஒளியினால் தூரத்தே நீர்போல தெரியும் காட்சி;

1. சமதரை 2. கானல்நீர் 3. வானவில்

28) மீன்களுக்கு நீந்த உதவுவது எது?

1. வால் 2. செதில்கள் 3. செட்டைகள்

29) தொங்கு வேர்கள்மூலம் தம்மைப் பலப்படுத்திக்கொள்ளும் தாவரம்;

1. அரசமரம் 2. பலாமரம் 3. ஆலமரம்

30) பின்வருவனவற்றுள் எளிய பொறிகளில் அடங்குவது எது?

1. சாய்தளம் 2. சீவுளி 3. மண்வெட்டி

### பகுதி - I விடைகள்

(பெப்ரவரி 5ஆம், 12 ஆம் திகதிகளில் பிரசுரமானவை)

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 01) | 1 | 07) | 1 | 13) | 2 | 19) | 1 | 25) | 3 |
| 02) | 3 | 08) | 1 | 14) | 1 | 20) | 3 | 26) | 3 |
| 03) | 3 | 09) | 3 | 15) | 1 | 21) | 3 | 27) | 2 |
| 04) | 3 | 10) | 1 | 16) | 1 | 22) | 1 | 28) | 3 |
| 05) | 1 | 11) | 1 | 17) | 2 | 23) | 1 | 29) | 3 |
| 06) | 1 | 12) | 3 | 18) | 1 | 24) | 2 | 30) | 1 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மீன்பிடித்தல் முறைகள்



மீன்பிடித் தொழிலானது, இன்று உலகளாவிய ரீதியில் முக்கியத்துவம் மிக்க ஒரு தொழிலாகவே கருதப்படுகின்றது. கடல், பெருங்கடல், ஆறு ஆகிய பகுதிகளிலிருந்து மீன்களைப் பிடித்து மனிதப் பயன்பாட்டிற்குப் பயன்படுத்துவதே மீன்பிடித்தல் எனப்படுகின்றது. இந்த மீன்பிடித் தொழில் மூலம் நேரடியாகவும் மறைமுகமாகவும் ஏராளமானவர்கள் பயனடைந்து வருகின்றனர். பண்டைய வரலாற்றிலும் சரி நிகழ்காலத்திலும் சரி மீன்பிடித் தொழிலானது, பரந்தளவில் மேற்கொள்ளப்படும் ஒரு தொழிலாகவே இருந்து வருகின்றது. எனினும், 18 ஆம் நூற்றாண்டு காலப்பகுதியிலிருந்து தான் மீன் வகைகளின் அடிப்படையில் மீன்பிடித் தொழிலில் கவனம் செலுத்தப்பட்டதாக அறிய வருகின்றது. இதனையடுத்தே மீன்பிடிக்கும் பகுதியிலுள்ள மீன் வகைகள், மீன்களின் எண்ணிக்கை போன்றன அறியப்பட்டு மீன்கள் தொடர்பாக தரம் பிரித்தலில் உள்ள சிக்கல்கள் நீக்கப்பட்டன.



## மீன்பிடிக் கருவிகள்

சிறிய வகையிலான மீன்களைப் பிடிப்பதற்கு தூண்டிலும் பெரிய வகையிலான மீன்களைப் பிடிப்பதற்கு வலையும் தற்போது பயன்படுத்தப்பட்டு வருகின்றது. ஆதிகாலத்தில் ஈட்டியைக் கொண்டும் மனிதர்கள் மீன்களைப் பிடித்துள்ளதாகக் கூறப்படுகின்றது.

## வலை

மீன்பிடி வலை என்பது மீன்பிடிக்கப் பயன்படுத்தப்படும் வழிமுறைகளில் ஒன்றாகும். இந்த வலையானது, உறுதியான கயிறுகளினால் பின்னப்பட்டதாகும். ஆனால், தற்காலத்தில் 'நைலோன்' எனப்படும் நூலினைக்கொண்டே மீன்பிடி வலைகள் பின்னப்படுகின்றன. இந்த வலைகள் இரண்டு வகைகளில் உள்ளன.

1. மிதமான மீன்பிடி வலை
2. தீவிர மீன்பிடி வலை

இதில் பொருத்தப்பட்ட வலைகள், மா பாச்சுவலை, சிக்க வைக்கும் வலை ஆகியன மிதமான வலையைச் சேர்ந்தவை. இவ்வாறே, கோல் இழுவலை, அடிமட்ட பலகை இழுவலை, மிதவை இழுவலை, சூழவலை, சுருக்கு வலை, ஓடு கயிறு வலை ஆகியன தீவிர மீன்பிடி வலை வகையைச் சேர்ந்தவையாகும்.

## தூண்டில் வகைகள்

**ஆயிரங்கால தூண்டில்:** இது ஒரு எரிபொருள் ஆற்றல் மிக்க மீன்பிடி வலையாகும். இந்த வலையில் மிதவை மற்றும் அடிமட்டத்தில் உள்ள சுறா போன்ற மீன் வகைகளைப் பிடிக்கலாம். இதில் மென் வலை மற்றும் கொக்கிகளை இடைவெளி விட்டுப் பொருத்திவிட வேண்டும்.



**கழிதூண்டில்:** கழி தூண்டில் மூலம் நீரின் மேற்பரப்பில் உள்ள ஒரே இன மீன்களைப் பிடிக்கலாம். இந்த தூண்டிலில் இரை பொருத்திப் படகிற்கு அருகாமையிலுள்ள பகுதிகளில் உள்ள மீன்களையும் பிடிக்கலாம்.

## மீன் பொறிகள்

மீன்பிடி முறையில் மீன்பொறிகள் பயன்படுத்துவதும் ஒரு முறையாகும். இம்முறையில் 21 வகையிலான மீன்களைப் பிடிக்கலாம். குறிப்பிட்ட 12 வகையான மீன்களை இந்த மீன்பொறியில் பொருத்துவர். பின்னர் இதனை நீரடித்தட்டு மற்றும் நீர்த்தேக்கங்களில் படகுகளுக்கு அருகாமையில் பொருத்துவர். இவற்றைக் கண்டு நெருங்கிவரும் மீன்கள் இயல்பாகவே இந்த பொறியில் சிக்கிக்கொள்ளும்.





## படகுகள்

1. இயந்திரமற்ற படகுகள்
2. இயந்திரப் படகுகள்

**இயந்திரமற்ற படகுகள்:** கட்டுமரம், மரப்பலகை தோணி, மிதவைத் தோணி, கட்டுமானப் படகு ஆகியன இயந்திரமற்ற படகுகளாகும்.

**இயந்திரப் படகுகள்:** சிறிய அல்லது நடுத்தர அளவுடைய சுமார் 10 மீற்றர் தொடக்கம் 15 மீற்றர் நீளமான படகுகளில் இயந்திரம் பொருத்தப்பட்டவை இந்த வகைப் படகுகளாகும். இவற்றிற்கு எரிபொருள் நிரப்புவதன்மூலம், அவை இயக்கப்படுவதால் துடுப்பின் துணையின்றி இயந்திர விசையுடன் முன்நோக்கிச் சென்று நடுக்கடலிலும் மீன் பிடிக்க முடியும். குறிப்பிட்ட ஓர் இடத்தில் படகினை நிறுத்தி நங்கூரம் இட்டு அவ்விடத்தில் வலையை வீசுவார்கள். சிறிது நேரம் கழித்து வலையில் சிக்கிய மீன்களை வலையிலிருந்து நீக்கி எடுப்பர்.

## மீன் உணவு

மீன்களில் 60 வீதம் நீர்த்தன்மையும், 15-24 வீதம் புரதச் சத்தும், 3-5 வீதம் கொழுப்புச் சத்தும், 04-02 வீதம் தாது உப்புக்களும் உள்ளன. மீனானது, கடல்சார் உணவு உற்பத்தியிலும், ஏற்றுமதியிலும் முக்கிய பங்கினை வகிக்கின்றது.

## கூடு வைத்து மீன் பிடித்தல்

கடலில் கூடு வைத்து மீன்பிடித்தல் முறை மிகவும் பழமையான ஒரு மீன்பிடித்தல் முறையாகும். நூறு ஆண்டுகளுக்கும் மேலாக இந்த பாரம்பரிய வழிமுறை இந்தியாவின் ராமேஸ்வரம் பகுதி மீனவர்களாலும், இலங்கை மீனவர்களாலும் கைக்கொள்ளப்படுகின்றது.

-அபிலாஷ்

வெல்லுங்கள்!

விஜய் – TOP NEWS இணைந்து வழங்கும் வாரம் ஒரு 8GB Pen Drive பரிசு!!



பிரதி புதன்கிழமைகளில் வெளிவரும் 'விஜய்' பத்திரிகைகளை நன்கு வாசித்து அதனை தொடர்ந்து வரும் ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் 'TOP News' SMS ஊடாகக் கேட்கப்படும் கேள்விக்கான சரியான விடையினை 'விஜய்' பத்திரிகையில் கண்டுபிடித்து தபாலிடுங்கள்.

வாராந்தம் 8GB Pen Drive இனை வெல்வதற்கான கேள்வியினை அறிந்துகொள்ள அருகில் காட்டப்பட்டவாறு உங்கள் DIALOG தொலைபேசியில் செயற்படுத்திக்கொள்ளுங்கள்.

'TOP News' SMS ஊடாகக் கேட்கப்படும் கேள்விக்கான விடையினை 'விஜய்' கூப்பனில் நிரப்பி அனுப்புதல் வேண்டும். கூப்பனில் நிரப்பப்பட்டு அனுப்பப்படும் விடைகள் மாத்திரமே போட்டிக்குத் தெரிவுசெய்யப்படும். சரியான விடையை அனுப்புவோரில் அதிர்ஷ்டசாலியாகத் தெரிவுசெய்யப்படும் ஒரு நபருக்கு வாரம் ஒரு 8GB Pen Drive பரிசாக வழங்கப்படும்.

அனுப்பவேண்டிய முகவரி:

Pen Drive
(12.02.2014)
விஜய்
த.பெ.இல 2037
கொழும்பு

'TOP News' SMS செயற்படுத்தும் முறை:




இவ்வார கூப்பன்:
12.02.2014

விடை: ..............................

பெயர்: ..............................

முகவரி: ..............................

தொ.பே.இல:.........................

பாடசாலை:..........................

தரம்: ..............................

..............................

கையொப்பம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காட்டிக் கொடுக்கப்பட்ட சுதந்திர இராச்சியம்

மார்ச் மாதம் இரண்டாம் திகதி நடத்தப்படும் கூட்டத்தில் அரசியலமைப்பை ஒழுங்குபடுத்தும் செய்தி ஓலையை வாசிப்பதற்கு திட்டமிடப்பட்டது. கண்டிக்கு வெளியே இருக்கும் மக்களின் மனதைக் கவர்வதற்காகவே இந்த நடைமுறை மேற்கொள்ளப்பட்டது. தமக்கு அருகே இருக்கும் ஓர் இராச்சியத்தைக் கைப்பற்ற வேண்டிய நியாயத்தை உலகிற்கு தெரிவிக்க வேண்டிய தேவையும் பிரித்தானிய அரசுக்கு இருந்தது.

கண்டி இராச்சியத்தின்கீழ் வாழ்ந்த மக்களின் ஏகோபித்த கோரிக்கைகள் மற்றும் மன்னனின் கொடுங்கோலாட்சியினால் சிங்காசன உரிமை வீழ்ச்சி அடைந்தது என்பதனை உலக மக்களுக்குத் தெரிவிப்பதற்காகவே அவர்கள் இவ்வாறு முயற்சித்தனர்.

இதனால், மன்னனின் குரூர செயல்களைப் பெரிதுபடுத்தி பொதுமக்களின் மற்றும் பிரதானிகளின் ஏகோபித்த வேண்டுகோளை இரண்டு மூன்று வருடங்களாக அதிகரித்துக் காட்டி அவர்களின் வற்புறுத்தல்களுக்காகவே கண்டி அரசைக் கைப்பற்றியதாக காட்டிக்கொண்டனர்.

இவ்வாறு இலங்கை மக்களுக்கு சொந்தமாக இருந்த இறுதி சுதந்திர இராச்சியத்தை பிரதானிகள் பொதுமக்களின் நன்மை எனக் கருதி நிரந்தரமாகவே ஆங்கிலேயரிடம் காட்டிக் கொடுக்கப்பட்டது. இதன்மூலம் எந்தவொரு தரப்பினரும் திருப்தி அடையவில்லை. நீண்டகாலமாக தனது விருப்பத்தின்படி அதிகாரத்துடன் ஆட்சிசெய்த மன்னனிடம்கூட அடிபணிந்து செல்லாமல் அதிக அதிகாரத்துடன் செயல்பட்ட பிரதானிகள் தொடர்ந்தும் ஆதிக்கம் செலுத்த அவகாசம் வழங்குவது ஆங்கில ஆட்சிக்குப் பெரும் இடையூறு என்பதை ஆங்கிலேயர்கள் பின்னர் உணர்ந்தனர்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# படம் பார்த்து விடையளிப்போம்

01. இப்படத்திலுள்ள போக்குவரத்து சாதனங்களைப் பெயரிடுக.

.......................................................................



02. இங்குள்ள தரைவழிப் போக்குவரத்து சாதனங்கள் இரண்டும் எவை?

அ) ஆகாயவிமானம், பேரூந்து
ஆ) பேரூந்து, கார்
இ) சைக்கிள், கார்
ஈ) பேரூந்து, மோட்டார் சைக்கிள்

03. இப்படத்தில் நீர்வழிப் போக்குவரத்துக்கு உதவக்கூடியது எது?

அ) ஆகாயவிமானம்
ஆ) கப்பல்
இ) படகு
ஈ) பேரூந்து




இங்குள்ள காட்சிகள் இடம்பெற வேண்டிய ஒழுங்குமுறையை 1, 2, 3, 4 என இலக்கமிட்டுக் காட்டுக.



01. இங்கு எத்தனை பூக்கள் மலர்ந்துள்ளன?

அ) ஐந்து பூக்கள்
ஆ) ஏழு பூக்கள்
இ) எட்டுப் பூக்கள்
ஈ) ஆறு பூக்கள்

02. இங்கு எத்தனை வண்ணத்துப்பூச்சிகள் உள்ளன?

.......................................................................

03. வண்ணத்துப்பூச்சிகள் எதற்காக பூக்களை நாடி வந்திருக்கும்?

அ) நலம் விசாரிப்பதற்காக
ஆ) தேன் அருந்துவதற்காக
இ) ஆறுதல் சொல்வதற்காக
ஈ) பூக்களைப் பறிப்பதற்காக

01. படத்தில் சிவப்பு நிறத்தில் காணப்படும் பழத்தின் பெயர் என்ன?

.......................................................................

02. இங்குள்ள பழங்களின் பெயர்களை சரியாகக் குறிப்பிடும் விடையின்கீழ் கோடிடுக.

1. திராட்சைப்பழம், வாழைப்பழம், அப்பிள், அன்னாசி, பேரிக்காய்
2. திராட்சைப்பழம், வாழைப்பழம், அப்பிள், ஆரஞ்சுப்பழம், பேரிக்காய்
3. பப்பாளி, வாழைப்பழம், அப்பிள், ஆரஞ்சுப்பழம், பேரிக்காய்
4. அப்பிள், திராட்சைப்பழம், கொய்யா, அன்னாசி, வாழைப்பழம்

03. படத்தில் உள்ளவற்றில் கொடியில் காய்க்கும் பழவகை எது?

1. வாழைப்பழம்
2. ஆரஞ்சுப்பழம்
3. திராட்சைப்பழம்
4. அப்பிள்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நூறாம் ஆண்டில் பாம்பன் பாலம்

**இந்தியாவிற்கும் இலங்கைக்குமிடையே போக்குவரத்திற்கென பாக்கு நீரிணை கடற்பரப்பின் ஒரு பகுதியில் உருவாக்கப்பட்ட பாலமே 'பாம்பன்' பாலமாகும். வரலாற்றுப் பெருமைமிகு இந்தப் பாலத்தின் நூற்றாண்டு விழா பெப்ரவரி 24 ஆம் திகதியன்று கொண்டாடப்படவுள்ளது.**


**இப்பாம்பன் பாலமானது, பல சிறப்புகளை தன்னகம் கொண்டுள்ளது. அந்தவகையில், கடலின் நடுவே குறுக்காக அமைக்கப்பட்டுள்ள இந்த ரயில் பாலம் கடலின் மறுதிசையில் செல்லும் கப்பல்களுக்கு வழிவிடுவதற்கு ஏற்றவாறு திறந்து மூடும் தன்மையைக் கொண்டுள்ளது. இத்தகைய சிறப்புமிகு 'பாம்பன் பாலம்' உருவான வரலாறு, அதன் சிறப்புத் தன்மைகள் பற்றிய சில சுவையான விபரங்களை இங்கு தெரிந்துகொள்வோம்.**



இந்தியாவின் தென்மாநிலமான தமிழ்நாட்டின் தென்கரையோரத்தின் கடலுக்கு அப்பால் இராமேஸ்வரம் தீவு அமைந்துள்ளது.
இத்தீவுப்பகுதிக்கு கடல் கடந்து செல்வதற்காக அமைக்கப்பட்டதே இந்த பாம்பன் பாலமாகும். இப் பாம்பன் பாலத்தின் ஊடாக இராமேஸ்வரத்திலுள்ள தனுஷ்கோடி என்ற இடத்தை வந்தடைந்ததும் அங்கிருந்து கப்பல் மூலம் மிக இலகுவாக இலங்கையின் தலைமன்னார் பகுதிக்கு சென்றடையும் வசதிகளும் உள்ளன.

## ஆரம்பத் திட்டம்

1899 ஆம் ஆண்டின்போது இப்பகுதியின் ஊடாக மேலே ரயிலும் கீழே கப்பலும் செல்லும் வகையில் 'டபிள் லீப் கென்டிலிவர் பிரிட்ஜ்' எனும் பெயரில் பாலமொன்றைக் கட்டுவதற்கு ஆங்கிலேய ஆட்சியாளர்கள் முடிவுசெய்திருந்தனர். அது, இந்தியா ஆங்கிலேயர்களின் ஆதிக்கத்திற்குள் இருந்த காலமாகும்.
அக்காலகட்டத்தில் அதாவது, 1902 ஆம் ஆண்டில் இதற்கான அறிவிப்பை




ஆங்கிலேய அரசு மேற்கொண்டது.
ஜெனரல் மன்றோ என்பவரால் இதற்கான ஆய்வுப்பணிகளும் மேற்கொள்ளப்பட்டன.
ஆனால், ஆரம்பநிலையிலேயே இத்திட்டம் கைவிடப்பட்டதனால், மீண்டும் ரைட்சன் என்பவரால் இதற்கென மற்றுமொரு திட்டம் தயாரிக்கப்பட்டு அத்திட்டமும் இங்கிலாந்து அரசின் அனுமதிக்காக அனுப்பி வைக்கப்பட்டது. இதற்கான நிதித் தொகை மிக அதிகமாக இருந்தமையால் அத்திட்டமும் கைவிடப்பட்டது.

## முயற்சியினால் ஏற்பட்ட வெற்றி

அடுத்தடுத்து மேற்கொள்ளப்பட்ட முயற்சிகளின் பலனாக இப்பாலத்தின் கட்டுமானப் பணிகள் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டன.
அதற்கமைவாக, 1902 இல் இங்கிலாந்திலிருந்து பொருட்கள் கொண்டுவரப்பட்டு கட்டுமானப்பணிகள் ஆரம்பிக் கப்பட்டு 1914 ஆம் ஆண்டு

> *1914 பெப்ரவரி 24 ஆம் திகதி தொடக்கம் பாம்பன் பாலத்தில் ரயில் போக்குவரத்தும் தனுஷ்கோடி - தலைமன்னார் கப்பல் போக்குவரத்தும் தொடங்கப்பட்டது. அன்று தொடக்கம் சென்னையிலிருந்து ரயிலில் வரும் பயணிகள் நேராக தனுஷ்கோடி சென்று அங்கிருந்து மிக இலகுவாக இலங்கையை வந்தடைய முடிந்தது*

இப்பாலம் கட்டி முடிக்கப்பட்டது. இதற்கமைய அதே ஆண்டு பெப்ரவரி 24 ஆம் திகதியன்று இப்பாலத்தில் போக்குவரத்து ஆரம்பிக்கப்பட்டது.
ஒருபுறம் ரயில் செல்லும் தண்டவாளத்தையும் அதற்கு சமாந்தரமாக இன்னொரு புறத்தில் வாகனங்கள் செல்லக் கூடிய போக்குவரத்து வீதி அமைப்பையும் கொண்டதாக இவை அமைக்கப்பட்டன.
எனினும், இந்த இரண்டு வழிகளிலும், ரயில் செல்லும் பாலமே 'பாம்பன் பாலம்' என்று அழைக்கப்படுகின்றது.
இப்பாலத்தின் வழியே தமிழ்நாட்டின் மண்டபம் எனும் பகுதியிலிருந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இராமேஸ்வரத்தின் தனுஷ்கோடிப்பகுதியை சென்றடைந்து, அங்கிருந்து கப்பல்கள்மூலம் இலங்கையின் தலைமன்னாருக்கு சென்றுவர ஏதுவாக போக்குவரத்து கள் நடைபெற்றன.

கருதப்படுகின்ற போதிலும் பாம்பன் பாலத்திற்கு அவ்வாறு சேதங்கள் எதுவும் ஏற்படாமை குறிப்பிடத்தக்கது.

### திறந்து மூடும் பாலம்

கடலுக்கு மேலாக பாம்பன் பாலத்தில் ரயில் போக்குவரத்து நடைபெறும் அதேவேளை, கீழ்புறமாக கடலில் கப்பல்கள் வரும்போது, கப்பலானது இப்பாலத்தில் மோதாதவாறு பாலத்தின் ஒரு பகுதி கப்பலுக்கு வழிவிடும் வகையில் மேல் நோக்கி திறந்து வழிவிடுகிறது. கப்பல் சென்ற பின்னர் மீண்டும் பழைய நிலைக்கு வந்து ரயில் செல்லக்கூடியவாறு பொருத்திக் கொள்ளும்.

ஆரம்ப காலங்களில் இப்பாலத்தை திறந்து மூடச் செய்யும் பணிகளுக்கு மனிதர்களே பயன்படுத்தப்பட்டனர். 2007 ஆம் ஆண்டில் இயந்திரங்களைக் கொண்டு இப்பாலத்தை திறந்து மூடும் பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

### கப்பல் போக்குவரத்து

பாம்பன் பாலத்தின் குறுக்காக மாதமொன்றிற்கு 10 கப்பல்கள் வரை பயணிக்கின்றன.

அப்பகுதி துறைமுகத்தின் அதிகாரிகளும் தமிழ்நாட்டின் மண்டபத்தின் அதிகாரிகளும் இணைந்து அனுமதி கொடுத்தால் மாத்திரமே பாலம் திறக்கப்படுவதற்கான அனுமதி வழங்கப்படுகின்றது. அதேபோல், 58 கி.மீற்றர் வேகத்திற்கு மேல் அப்பகுதிகளில் காற்றடித்தால் பாலத்திலுள்ள தானியங்கி சமிக்ஞைகள் (சிக்னல்) செயல்பட்டு, ரயில் செல்வதற்கான அனுமதி மறுக்கப்படும். காற்று வீசும் நிலை இயல்புக்கு வந்த பிறகே ரயிலுக்கான சமிக்ஞை கிடைக்கப்பெறும்.

'பாம்பன் பாலம்' 99 வருடங்களைக் கடந்து இம்மாதம் 24 ஆம் திகதியுடன் 100 வருடங்களை பூர்த்தி செய்கின்றமையை யொட்டி கடந்த ஜனவரி 28 ஆம் திகதி ஆரம்ப விழா நடைபெற்றது. இந்த ஆரம்ப விழாவினை இந்தியாவின் முன்னாள் ஜனாதிபதி அப்துல் கலாம் அவர்கள் ஆரம்பித்து வைத்தமையும் குறிப்பிடத் தக்கது. 100 வருடங்களைப் பூர்த்திசெய்து வரலாற்றில் இடம்பிடித்துள்ள பாம்பன் பாலத்தை இந்தியாவின் புராதன சின்னமாக அறிவிப்பதற்கு இந்திய அரசாங்கம் திட்டமிட்டுள்ளமையும் குறிப்பிடத் தக்கது.

-வீ. ரெட்லீ ஹெரிசன்



# பெப்ரவரி 24 ஆம் திகதி நூற்றாண்டு விழா கொண்டாட்டம்

### கட்டமைப்பு

இந்த பாலத்தின் நீளம் 2.3 கிலோமீற்றர் ஆகும். அதாவது 6,777 அடிகளாகும். 1,800 தொன் சல்லிக்கல் மணல், 500 தொன் சீமெந்து, [illegible]00 தொன் இரும்பு [illegible]ப்பொருட்களைக் [illegible] இப்பாலம் அமைக[illegible]ப்பட்டது.

இப்பாலத்தை தாங்கும் வகையில் 145 [illegible]டிய தூண்கள் அமைக்கப்பட்டுள்ளன. உலகிலேயே மிக்வும் மோசமாகத் துருப்பிடிக்கும் இடங்களில் இரண்டாவது இடமாக இக்கடல் பகுதியே துருப்பிடிக்காத வகையில் மிகவும் சிரமங்களுக்கு மத்தியில் கட்டப்பட்ட இப்பாலம் அமைந்துள்ள பகுதிகளில், 1964 ஆம் ஆண்டில் கடும் புயல் தாக்கியது. அப்போது இப்பாலத்தின் இரும்புப்பகுதிகளோ, திறந்து மூடும் பகுதிகளோ சேதமடையவில்லை. ஆனால், பாலத்தின் ஏனைய பகுதிகள் சேதமடைந்ததால் போக்குவரத்து சிலகாலம் தடைப்பட்டது. இருப்பினும், 45 நாட்களின் பின்னர் போக்குவரத்து மீண்டும் வழமைக்குத் திரும்பியது.

### போக்குவரத்து நெறிப்படுத்தல்

இப்பாலத்தின் பராமரிப்புப் பணிகளில் பொறியியலாளர்கள் உட்பட 20 பேர் கடமையாற்றுகின்றனர். பாம்பன் பாலத்தின் வழியே கப்பல்கள் செல்கையில்

**கடலின் நடுவே திறந்து மூடும் சிறப்புமிகு பாலம்**





## 'பாம்பன் பாலம்' மனித மனங்களை இணைக்கிறது

### முன்னாள் ஜனாதிபதி அப்துல் கலாம்

'பாம்பன் பாலம்' நூறாண்டுகளை பூர்த்திசெய்வதையொட்டி நடைபெற்ற ஆரம்ப விழாவில் சிறப்பு அதிதியாகக் கலந்துகொண்ட இந்தியாவின் முன்னாள் ஜனாதிபதி அப்துல் கலாம் அவர்கள் கூறிய சில கருத்துக்கள் வருமாறு;






''ராமேஸ்வரம் நான் பிறந்த ஊர் என்றாலும் 'பாம்பன்' எனக்கு மிகவும் பிடித்த ஊர் ஆகும். கடல் மீது அமைந்த இப்பாலத்தை நூறு ஆண்டுகளாக கடும் காற்று, சூறாவளியில் இருந்து பாதுகாத்து இன்றும் புதுப் பொலிவுடன் வைத்துள்ள ரயில் சேவை பொறியியலாளர்களைப் பாராட்டுகிறேன். பல்வேறு நாடுகளைச் சேர்ந்த கோடிக் கணக்கான மக்கள் இப்பாலத்தில் பயணம் செய்துள்ளமையால் இப்பாலம் மனித மனங்களை இணைத்துள்ளது. நான் பாடசாலையில் பயிலும்போதும், பல்கலைக்கழகத்தில் பயிலும்போதும், பல நூறு தடவைகள் இந்த 'பாம்பன்' பாலத்தைக் கடந்து சென்றிருக்கின்றேன். பாம்பன் பாலத்தில் செல்கின்ற ரயிலுக்கு 'பாம்பன் எக்ஸ்பிரஸ்' என பெயர் சூட்டப்படவேண்டும் எனவும் கேட்டுக்கொள்கின்றேன்''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எமது நாட்டின் ஞாபகார்த்த நாணயக்குற்றிகள் சில...

எமது நாட்டில் புழக்கத்தில் உள்ள நாணயக்குற்றிகளில் ஞாபகார்த்த நாணயக்குற்றிகளும் அடங்கும். தேசிய மற்றும் சர்வதேச முக்கியத்துவம் வாய்ந்த தினங்களைக் குறிக்கவே இவ்வாறான நாணயக்குற்றிகள் வெளியிடப்படுகின்றன. கடந்த வாரம் இவற்றில் சிலவற்றைப் பற்றி அறிந்தோம் அல்லவா? இவ்வாரம் மேலும் சிலவற்றைப் பற்றி அறிந்துகொள்வோம்.



## உலகக் கிண்ண கிரிக்கெட் போட்டி - 2007



மேற்படி உலகக் கிண்ண கிரிக்கெட் போட்டித் தொடரில் 14 நாடுகளின் அணிகள் கலந்து கொண்டன. இதன் இறுதிப் போட்டியில் இலங்கை விளையாடியதை நினைவுகூரவும் இலங்கை அணிக்கு நன்றி தெரிவிக்கும் பொருட்டும் இருவகை நாணயக் குற்றிகள் வெளியிடப்பட்டன. இவற்றில் 1000 ரூபா பெறுமதி யான நாணயக்குற்றியானது, நிக்கல் தடவிய இரும்பினாலானது. இது புழக்கத்திற்கு விடப்படாத நாணயக்குற்றியாகும். மற்றையது- 5 ரூபாய் பெறுமதியுடையது. இது பித்தளை தடவிய இரும்பினாலானது. இது மக்கள் புழக்கத்திற்கு விடப்பட்ட நாணயக்குற்றியாகும்.

## ஊழியர் சேமலாப நிதியத்தின் பொன்விழா - 2008



1958 இல் ஸ்தாபிக்கப்பட்ட இந்த நிதியத்திற்கு, 50 ஆண்டுகள் பூர்த்தியானதை முன்னிட்டு இரண்டு நாணயக்குற்றிகள் வெளியிடப்பட்டன. அவை 1000 ரூபாய் மற்றும் 2 ரூபாய் பெறுமதி யுடைய நாணயக்குற்றிகளாகும். இரண்டு நாணயக்குற்றிகளும் நிக்கல் முலாமிடப்பட்ட உருக்கி னாலானவை.

## இலங்கை சுங்கத்தின் இருநூறாவது ஆண்டு நிறைவு- 2009




1809 இல் நிறுவப்பட்ட சுங்கத் திணைக்களத்திற்கு, 2009 ஜூன் 14 ஆம் திகதியுடன் இருநூறு ஆண்டுகள் பூர்த்தியடைந்தன. இதனையிட்டு வெளியிடப்பட்ட நாணயக்குற்றியின் பெறுமதி 200 ரூபாய் ஆகும். இது வெள்ளியி னால் வார்க்கப்பட்டது. 200 ரூபாய் என்று குறிப்பிடப்பட்டு நாணயக்குற்றியொன்று வெளியிடப்பட்டமை இதுவே முதல் தடவையாகும்.

## இலங்கை ராணுவத்தின் 60 ஆவது ஆண்டு நிறைவு விழா - 2009



இலங்கை ராணுவம் நிறுவப்பட்டு 60 ஆண்டுகள் நிறைவடைவதையிட்டு, 1000 ரூபாய் பெறுமதி கொண்ட இரண்டு நாணயக்குற்றிகள் வெளியிடப்பட்டன. இதில் ஒன்று வெள்ளியினால் வார்க்கப்பட்டுள்ளதுடன், மற்றையது செப்பு/நிக்கலால் ஆனது.

## இலங்கை மத்திய வங்கியின் 60 ஆவது ஆண்டு நிறைவு - 2010



இந்த நிகழ்வுக்காக இலங்கை மத்திய வங்கி வெளியிட்ட நாண யக்குற்றியின் பெறுமதி 5000 ரூபாய் ஆகும். இது வெள்ளியி னால் வார்க்கப்பட்டதாகும்.

## இலங்கை விமானப்படையின் 60 ஆவது ஆண்டு விழா - 2011



இலங்கை விமானப்படையின் 60 ஆவது ஆண்டுகள் நிறைவை யிட்டு, 2 ரூபாய் பெறுமதியான நாணயக்குற்றி வெளியிடப்பட் டது. இது நிக்கல் முலாமிடப் பட்ட உருக்கினால் வார்க்கப்பட் டதாகும்.

## மக்கள் வங்கியின் பொன்விழா - 2011



1961 ஆம் ஆண்டு ஆரம்பிக் கப்பட்ட மக்கள் வங்கியின் 50 ஆண்டுகள் பூர்த்தியையிட்டு வெளியிடப்பட்ட நாணயக்குற்றி யின் பெறுமதி 1000 ரூபாய் ஆகும். இது தங்க முலாமிடப்பட்ட வெள்ளி நாணயக்குற்றியாகும்.

## 2600 ஆவது சம்புத்தத்வ ஜயந்தி விழா -2011



சம்புத்தத்வ ஜயந்தியையிட்டு, 1000 ரூபாய் மற்றும் 10 ரூபாய் பெறுமதிகளில் இரண்டு நாணயக்குற்றிகள் வெளியிடப்பட்டன. 1000 ரூபாய் பெறுமதியான நாணயக்குற்றி வெள்ளியினால் ஆனது. 10 ரூபாய் பெறுமதி கொண்ட நாணயக்குற்றி நிக்கல் முலாமிடப்பட்ட உருக்கினால் வார்க்கப்பட்டதாகும்.

## கொழும்பு ஆனந்த கல்லூரியின் 125 ஆவது ஆண்டு நிறைவு - 2012




1886 இல் ஆரம்பிக்கப்பட்ட கொழும்பு ஆனந்தக் கல்லூரியின் 125 ஆவது ஆண்டுகள் நிறை வினையிட்டு, 2000 ரூபாய் பெறு மதியிலான வட்ட வடிவ நாண யக்குற்றி வெளியிடப்பட்டது. இது வெள்ளியினால் வார்க்கப்பட்டதாகும். (பி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தளிர்கரம்

கொடுக்கப் பட்டுள்ள காய்கறிகளில் அவற்றிற்கு இணையான படங்களில் உள்ள கட்டத்தின் எண்ணை எடுத்து எழுதுக.




L, l எழுத்துக்களை எழுதுவோம்.

L l





L L L L L L L L

l l l l l l l l l

L L L L L L L L

l l l l l l l l l




கொடுக்கப் பட்டுள்ள காட்டு விலங்குகளில் விடுபட்ட மெய் எழுத்துக்களை எழுதுக.



# சொல்சாரா தொடர்பாடலின் பணிகள்

சொல்வழி மற்றும் எழுத்துவழி தவிர்ந்த ஏனைய வழிமுறைகள் ஊடாக கருத்துப் பரிமாற்றம் செய்யப்படுகின்ற தொடர்பாடல் செயன்முறை வடிவத்தை வாய்மொழிசாரா தொடர்பாடல் என வரையறை செய்ய முடியும். தொடர்பாடல் செயன்முறைகளின் போது செய்திப் பரிமாற்றம் 90 சதவீதம் சொல்வழிசாரா குறிப்பு நிலை வழிகளினூடாகவே கருத்துக்கள், உணர்வுகள், எண்ணங்கள் பரிமாற்றப்படுவதாக சுட்டிக்காட்டப்படுகின்றது. அமைதி மூலம் கருத்துக்கள் வெளிப்படுத்தப்பட்டு வெற்றிகள் இலகுவாகப் பெறப்படுகின்றன.

கலீ மற்றும் லெதர்ஸ் (1976) வாய்மொழிசாரா தொடர்பாடலினால் பின்வரும் கருமங்கள் நிறைவேற்றப்படுவதாக சுட்டிக்காட்டுகின்றனர்.

- ஆளிடைத் தொடர்பின்போது கருத்தை விளங்கிக்கொள்ள உதவுதல்.
- வாய்மொழி முன்வைத்தலைவிட உணர்வுகள் நன்கு வெளிப்படுத்தப்படுதல் இடம்பெறுதல்.
- கருத்துக்களையும், நோக்கங்களையும் குழப்பமின்றி வெளியிடுதல்.
- வாய்மொழியல்லாத சமிக்ஞைகள், அடையாளங்கள் காரணமாக உயர் தொடர்பாடல் மட்டம் ஒன்று ஏற்படுதல்.



ஊடக பாடநெறி 72

- வாய்மொழி அடையாளங்களைவிட, வாய்மொழியல்லாத அடையாளங்கள் வினைத்திறன் மிக்கவையாக இருத்தல்.
- குறித்தவொன்றை உணர்த்துதல் மற்றும் முன்மொழிதல் செயற்பாட்டுக்கு மிகப் பொருத்தமான செல்வழியாக இடம்பெறுதல்.

மேலும், சொல்சாரா தொடர்புகளின் ஊடாக ஒருவரது உணர்ச்சிகளை முழுமையாக வெளிப்படுத்த முடிகின்றது. செய்தித் தெரிவு நேரடியாக அல்லாமல் குறிப்பால் உணர்த்தப்படுகின்றது. சாதாரணமான மக்கள் அனைவரும் மிக எளிமையான வகையில் கருத்துப் பரிமாற்ற செயல்களில் ஈடுபடுவதற்கு உதவுவதாக அமைகிறது. எந்தவொரு சூழ்நிலையிலும் சுயமாக கருத்து வெளிப்பட உதவுகின்றது. அறிவுசார் தன்மை மற்றும் மொழியறிவு அற்ற எவரும் சொல்சாரா செயற்பாட்டை முன்னெடுப்பதற்கு வாய்ப்பளிக்கின்றது. சொல்சார் தொடர்பாடலின்போது, சொல்சாரா தொடர்பு வழிமுறைகளை இணைத்து வினைத்திறன் மிக்க கருத்துப் பரிமாற்றத்தை முன்னெடுக்க முடியும். விசேட தேவையுள்ளோருடனான கருத்துப் பரிமாற்றங்கள் ஒழுங்குபடுத்தப்பட்ட முறைமையில் வடிவமைக்கப்பட்டு அண்மைக்காலங்களில் பயன்படுத்தப்பட்டு வருவதை அவதானிக்க முடிகின்றது. பேச்சாற்றல், செவிப்புலனாற்றல் குன்றியோருக்கு கற்றல்மொழி, வாய்மொழியற்ற குறியீடுகளாக கல்வி நிறுவன செயற்பாடுகளிலும், வெகுசன ஊடகங்களில் இடம்பெறுகின்ற அறிக்கையிடல்களிலும் முதன்மைப்படுத்தப்பட்டு வருவதை உணர முடிகின்றது.

தொடர்பாடல் செயன்முறையில் ஈடுபடுகின்ற நபர்கள் பேசுகின்ற தன்மையை ஆராய்வதன்மூலமும், அவதானிப்பதன்மூலமும், வாய்மொழியல்லாத முறைகளையும், குறிப்புக்களையும் இனங்கண்டு கொள்ள முடியும். (தொடரும்)

**பரராஜசிங்கம் இராஜேஸ்வரன்,**
யா/கொக்குவில் இந்துக் கல்லூரி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## ආයුබෝවන්
## ஆயுபோவன்
## வணக்கம்

இன்றைய பாடத்தில் அம்மாவுக்கும் மகளுக்கும் இடையிலான ஓர் உரையாடலைப் பார்ப்போம்.

**අම්මා: දුව, සුදු ගවුම් මහන්න ඕනෙ නේද?**
துவ, சுது கவும் மஹன்ன ஓனே நேத?
**அம்மா: மகள், வெள்ளைச் சட்டை தைக்க வேண்டும் தானே?**

**දුව: ඔව් අම්මේ. කාටද මහන්න දෙන්නේ?**
ஒவ் அம்மே. காட்டத்த மஹன்ன தென்னே?
**மகள்: ஆம் அம்மா. யாரிடம் தைக்கக் கொடுப்பது?**

**අම්මා: කමලා නැන්දා මහනවනේ, එයාට දෙමු.**
கமலா நெந்தா மஹனவனே, எயாட்ட தெமு.
**அம்மா: கமலா மாமி தைக்கிறார் அல்லவா, அவருக்குக் கொடுப்போம்.**

**දුව: අම්මේ, මට සපත්තුත් ඕනේ.**
அம்மே, மட்ட சபத்துத் ஓனே.
**மகள்: அம்மா, எனக்கு சப்பாத்தும் வேண்டும்.**

**අම්මා: ඇයි ඔයාගේ සපත්තු කෝ?**
எய் ஒயாகே சபத்து கோ?
**அம்மா: ஏன் உங்களுடைய சப்பாத்து எங்கே?**

**දුව: ඒක මට හිරයි අම්මේ.**
ஏக்க மட்ட ஹிறய் அம்மே.
**மகள்: அது எனக்கு இறுக்கம் அம்மா.**

**අම්මා: පොත් ගන්න යද්දි සපත්තු ගමු.**
பொத் கன்ன யத்தி சபத்து கமு.
**அம்மா: புத்தகங்கள் வாங்கப்போகும்போது சப்பாத்தும் வாங்குவோம்.**

**දුව: කමලා නැන්දලගේ ගෙදර කීයටද යන්නේ?**
கமலா நெந்தலகே கெதற கீயட்டத யன்னே?
**மகள்: கமலா மாமியின் வீட்டுக்கு எத்தனை மணிக்குப் போவது?**

**අම්මා: හවස යමු.**
ஹவச யமு.
**அம்மா: பின்னேரம் போவோம்.**

**දුව: අම්මේ සුදු රෙදි?**
அம்மே சுது ரெதி?
**மகள்: அம்மா வெள்ளைத் துணி?**

**අම්මා: පාසලෙන් ලැබුණු රෙදිත් තියෙනවා. මම ගිය සතියේ තව රෙදි ටිකක් ගෙනාවා.**
பாசலென் லெபுனு ரெதித் தியெனவா. மம கிய சதியே தவ ரெதி டிக்கக் கெனாவா.
**அம்மா: பாடசாலையில் இருந்து கிடைத்த துணியும் இருக்கிறது. நான் போன வாரம் இன்னும் துணி வாங்கினேன்.**

**දුව: ගවුම් කීයක්ද අම්මේ?**
கவும் கீயக்த அம்மே?
**மகள்: எத்தனை சட்டைகள் அம்மா?**

**අම්මා: ගවුම් දෙකක් මහමු. තව ගවුම් තියෙනවනේ.**
கவும் தெகக் மஹமு. தவ கவும் தியெனவனே.
**அம்மா: இரண்டு சட்டைகள் தைப்போம். இன்னும் சட்டைகள் இருக்குத்தானே.**

### பயிற்சி

**சிங்களத்தில் மொழிபெயர்க்க.**

i. வெள்ளைச் சட்டை தைக்க வேண்டும்.
..................................................

ii. உங்களுடைய சப்பாத்து எங்கே?
..................................................

iii. இரண்டு சட்டைகள் தைப்போம்.
..................................................






✱ நிகழ்கால தனி வாக்கியங்களில் (Present Simple Tense) காணப்படுகின்ற, வினா வாக்கியம், உடன்பாடு வாக்கியம் மற்றும் எதிர்மறை வாக்கியம் ஆகிய மூன்றையும் மேலும் இங்கே ஒப்பிட்டுப் பயில்வோம்.

(அ) நீ இரவில் கோப்பி குடிப்பதுண்டா?
Do you drink coffee at night?
(வினா வாக்கியம் -Interrogative Sentence)

(ஆ) ஆம், நான் இரவில் கோப்பி குடிப்பதுண்டு.
Yes, I drink coffee at night.
(உடன்பாடு வாக்கியம் -Affirmative Sentence)

(இ) இல்லை, நான் இரவில் கோப்பி குடிப்பதில்லை.
No, I do not drink coffee at night.
(எதிர்மறை வாக்கியம் -Negative Sentence)

✱ Do you drink?
நீ குடிப்பதுண்டா?

✱ Yes, I drink.
ஆம், நான் குடிப்பதுண்டு.

✱ No, I do not drink.
இல்லை, நான் குடிப்பதில்லை.

(ஈ) அவர்கள் இரவில் பாண் சாப்பிடுவதுண்டா?
Do they eat bread at night?
(வினா வாக்கியம் -Interrogative Sentence)

(உ) ஆம், அவர்கள் இரவில் பாண் சாப்பிவதுண்டு.
Yes, they eat bread at night.
(உடன்பாடு வாக்கியம் -Affirmative Sentence)

(ஊ) இல்லை, அவர்கள் இரவில் பாண் சாப்பிடுவதில்லை.
No, they do not eat bread at night.
(எதிர்மறை வாக்கியம் -Negative Sentence)

✱ Do they eat?
அவர்கள் சாப்பிடுவதுண்டா?

✱ Yes, they eat.
ஆம், அவர்கள் சாப்பிடுவதுண்டு.

✱ No, they do not eat.
இல்லை, அவர்கள் சாப்பிடுவதில்லை.

(எ) நீ இரவில் தொலைக்காட்சி பார்ப்பதுண்டா?
Do you watch television at night?
(வினா வாக்கியம் -Interrogative Sentence)

(ஏ) ஆம், நான் இரவில் தொலைக்காட்சி பார்ப்பதுண்டு.
Yes, I watch television at night.
(உடன்பாடு வாக்கியம் -Affirmative Sentence)

(ஐ) இல்லை, நான் இரவில் தொலைக்காட்சி பார்ப்பதில்லை.
No, I do not watch television at night.
(எதிர்மறை வாக்கியம் -Negative Sentence)

✱ Do you watch television?
நீ தொலைக்காட்சி பார்ப்பதுண்டா?

✱ Yes, I watch television.
ஆம், நான் தொலைக்காட்சி பார்ப்பதுண்டு.

✱ No, I do not watch television.
இல்லை, நான் தொலைக்காட்சி பார்ப்பதில்லை.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீங்களும் மெஜிக் செய்யலாம்....

# மிதக்கும் முட்டை




இன்று நாம் மாயாஜால தூளைப் பயன்படுத்தப் போகின்றோம். இன்றைய மாயாஜாலத்தின் ரகசியம் இந்த தூளாகும். ஆனால், மாயாஜால வித்தையின் இறுதி முடிவு வரையில் அந்தத் தூள் என்ன என்பதை நாம் கூறப்போவதில்லை.

**தேவையான பொருட்கள்:**

* முட்டைகள் இரண்டு
* ஒரே அளவாக நீர் நிரப்பப்பட்ட வெளியே தெரியக்கூடியவாறான இரண்டு கண்ணாடிக் குவளைகள்
* மாயாஜால தூள்

இன்றைய மாயாஜால வித்தையில் மறைப்பதற்கு ஒன்றும் இல்லை. அதனால், ஆரம்பம் முதல் பார்வையாளர்களால் [illegible]னைத்தையும் தெளிவாகக் காணக்கூடிய வகையில் இந்த மாயாஜால வித்தையை செய்ய முடியும்.

**1 ஆவது படிமுறை:**




இரண்டு கண்ணாடிக் குவளைகளிலும் உள்ள நீரில் இரண்டு முட்டைகளையும் அமிழ்த்தி வையுங்கள். முட்டைகள் நீரில் அமிழ்வதனை நீங்கள் காண்பீர்கள். முட்டையை நீரில் இட்டவுடன் பழுதடைந்த முட்டை எனின், மிதக்கும் நாம் இதற்காக பழுதடைந்த முட்டைகளை தெரிவுசெய்வதில்லை. இதனால்தான் 1 ஆவது படிமுறையினை செய்து காட்டுகின்றோம்.


**2 ஆவது படிமுறை:**



விருப்பமான கண்ணாடிக் குவளையினை தெரிவுசெய்யுமாறு பார்வையாளர்களிடம் கூறுங்கள். அதன்பின் தெரிவு செய்யப்பட்டுள்ள கண்ணாடிக் குவளையில் உள்ள முட்டையினை வெளியில் எடுங்கள்.

**[illegible] ஆவது படிமுறை:**







அந்தக் கண்ணாடிக் குவளையினுள் மூன்று கரண்டி அல்லது நான்கு கரண்டி மாயாஜாலத் தூளை இட்டு நன்கு கரையும் வரையில் கலக்கவும்.

**4 ஆவது படிமுறை:**

இப்போதுதான் மாயாஜால வித்தையின் சுவாரஸ்யமான கட்டம் நிகழப்போகின்றது. வெளியே எடுக்கப்பட்ட முட்டையினை மீண்டும் அந்த கண்ணாடிக் குவளையினுள் இடுங்கள்.

மாயாஜாலம் என்ன ஆனது? தூளின் பலத்தால் முட்டை மேலே மிதக்கும். உங்களுக்கு விருப்பமெனில் அடுத்த கண்ணாடிக் குவளையிலும் அவ்வாறு செய்து காட்டுங்கள். பார்வையாளர்களைப் போன்று உங்களுக்கும் இந்த மாயாஜால தூள் என்னவென்று தெரிந்துகொள்ள ஆர்வமாக இருக்கும் அல்லவா?





**ரகசியம்:**

அந்த மாயாஜால தூள்தான் உப்பு! மிகவும் மென்மையான உப்புத்தூள் எனின், அது சிறந்ததாகும். அப்பொழுது தூள் விரைவாகக் கரைந்துவிடும். நீங்கள் தெரிவுசெய்யும் கண்ணாடிக் குவளை மற்றும் அதில் உள்ள நீர் என்பனவே உப்பின் அளவினைத் தீர்மானிக்கும். சாதாரண அளவு குவளை எனின், நான்கு கரண்டி உப்புத் தேவைப்படும். கலவை அடர்த்தியாக இருக்கும் அளவுக்கு நன்று.

இன்றைய மாயாஜால வித்தை விஞ்ஞான செயன்முறையினை அடிப்படையாகக் கொண்டது. சுத்தமான நீரினைவிட உப்பு நீரின் அடர்த்தி அதிகமாகும். இதனால்தான் முட்டையும் மிதக்கின்றது. சாக்கடல் பற்றி நீங்கள் அறிந்திருப்பீர்கள் அல்லவா? அங்கு எதுவுமே மூழ்காமல் இருப்பதற்கு அந்த நீரின் அடர்த்தியே காரணமாகும்.

# விஜய் மாணவர் கழகம்



அங். இல: 5532

கு.குலவிழி, குட்செட் வீதி, வவுனியா.



அங். இல: 5533

கோ.கேதுஷா, மன்னம்பிட்டி, பொலன்னறுவை.



அங். இல: 5534

எஸ்.பிரியா, பதுளை வீதி, செங்கலடி.



அங். இல: 5535

ச.ஷலோம், நல்லூர், யாழ்ப்பாணம்.



அங். இல: 5536

சி.அக்ஷரன், பொற்பதி வீதி, கொக்குவில்.



அங். இல: 5537

ஞா.சுபஸ்திகன், கோப்பாய் வடக்கு, கோப்பாய்.



அங். இல: 5538

ஜே.விஜய், குருமன்காடு, வவுனியா.



அங். இல: 5539

க.கஜீகரன், தாவடி தெற்கு, கொக்குவில்.



அங். இல: 5540

ஃபஸ்லான் ரஹுமான், மத்திய வீதி, தர்கா நகர்.



அங். இல: 5541

ஆர்.அப்துல்லாஹ், கொடிகாம்ப, ஹதரலியத்த.

# தெரிந்து கொள்வோம்

* 'உப சம்பதா' என்றால் என்ன?

  பிக்குவாகமாறும் விழா இவ்வாறு அழைக்கப்படுகின்றது



* Peter Pan ,Wonder Boy எனும் புனைப்பெயர்களால் அழைக்கப்படும் புகழ்பெற்ற ஹொலிவுட் இயக்குனர் யார்?

  ஸ்டீபன் ஸ்பியல்பர்க்



* இந்தியாவின் முதல் விண்வெளி வீரர் யார்?

  ராகேஷ் ஷர்மா



* பிரித்தானிய பிரதமர் ஒருவர் நொபெல் பரிசு பெற்ற புகழ் பெற்ற எழுத்தாளராவார். அவர் யார்?

  வின்சன்ட் சேர்ச்சில் 1953 இல் நொபெல் பரிசு பெற்றார்

* பின்வரும் நாமங்கள் எந்த நாட்டின் தலைமைகள்?




  i. ஹசன் ரூஹானி - ஈரான்
  ii. ஜிக்மி தின்லீ - பூட்டான்
  iii. ஜெக்கொப் சுமா - தென் ஆபிரிக்கா
  iv. சீ ஜின்பிங் - சீனா

தொகுப்பு: உடுவை பரந்தாமன்



படத்தை இங்கே ஒட்டவும்

விஜய் மாணவர் கழகம்

விஜய் மாணவர் கழகத்தில் இணைய விரும்புகின்றீர்களா? அப்படியாயின் அருகேயுள்ள கூப்பனை நிரப்பி உங்களின் புகைப்படத்துடன் ஒட்டி அனுப்பி வையுங்கள்

பெயர்: ........................................

முகவரி: ........................................

........................................

பாடசாலை: ........................................

வகுப்பு: ........................................

திகதி: ........................................

ஏற்கனவே அனுப்பியவர்கள் மீண்டும் அனுப்புவதை தவிர்க்கவும்

அனுப்ப வேண்டிய முகவரி :
'விஜய்'
மாணவர் கழகம்
த.பெ.எண் 2087
கொழும்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பேராசை பெருநஷ்டம்



அந்த வீதியில் ஒரு வயதான பெண் சென்றுகொண்டிருந்தாள். அவளது கழுத்தில் அணிந்திருந்த ஐந்து பவுன் சங்கிலி ஒரு திருடனின் கண்ணில் பட்டுவிட்டது. சற்று நேரத்தில் அப்பெண்ணினது காலடியருகே ஏதோ ஒரு பை உருண்டு வந்தது. அந்த பெண் பையை எடுத்துப் பார்த்தாள். உள்ளே தகதகவென ஒரு தங்கக் கட்டி ஜொலித்தது. சுற்றும் முற்றும் பார்த்த அப்பெண் யாரும் பார்க்காததை உறுதி செய்துகொண்டு, அக்கட்டியை மட்டும் எடுத்து முந்தானையில்முடிந்து கொண்டாள். அந்த வேளை அந்த திருடன் அவள் முன் வந்து நின்றான். "பாட்டி... அந்த தங்கக்கட்டியை நீ எடுத்து மறைத்து வைத்ததை நான் பார்த்துவிட்டேன். எனக்கு அதில் பாதியைக் கொடுத்துவிடு. இல்லாவிட்டால், கடத்தல் தங்கம் வைத்திருப்பதாக பொலிசில் காட்டிக்கொடுத்து விடுவேன்" என மிரட்டினான். தங்கக்கட்டியில் பாதியைக் கொடுக்க யாருக்குத்தான் மனம் வரும். மூதாட்டி அவனிடம், "தம்பி நான் ஒரு ஏழை! ஏதோ, கடவுளாகப் பார்த்து இன்றைக்கு கருணை காட்டியிருக்கிறார். நீ அதிலும் பங்கு கேட்கிறாயே!" என்று கொடுக்க மறுத்தாள்.

திருடன் விடாப்பிடியாய் அப்பெண்ணிடம் தங்கம் கேட்டு நின்றான். மூதாட்டிக்கோ, அவனிடம் தங்கத்தைக் கொடுக்க விருப்பமில்லை. இதனால், அவளது எண்ணம் வேறு விதமாக வேலை செய்தது. 'தங்கக்கட்டியைப் பார்த்தால் 20 பவுனாவது தேறும். இதில் வந்தவனுக்குப் பாதியை எப்படிக் கொடுப்பது' என சிந்தித்தாள். எனவே, திருடனிடம் "சரி! என் கழுத்தில் இருக்கும் இந்த ஐந்து பவுன் சங்கிலியைத் தருகிறேன். அத்தோடு ஆளை விடு" என்றவள், தன் சங்கிலியைக் கழட்டினாள்.

திருடனும் ஒன்றும் தெரியாதவன் போல, "சரி... சரி... வயசானவள்ாக இருக்கிறாய். இல்லாவிட்டால் பாதிப்பங்கு வாங்காமல் விட்டிருக்க மாட்டேன்" என்றவன், சங்கிலியை வாங்கிக் கொண்டுபோய் விட்டான். மூதாட்டியும் வீட்டுக்குச் சென்று அவசர அவசரமாக தங்கக்கட்டியை எடுத்து உரசினாள். மேலே ஒட்டியிருந்த தகதகத்த தாள் கிழிந்து கையுடன் வந்தது. உள்ளே ஒரு செம்புக்கட்டி இருந்தது. அதிர்ச்சி அடைந்த அப்பெண் தனது பேராசையால் வந்த விளைவை எண்ணி வருந்தினாள். குறுக்கு வழியில் சம்பாதிக்க ஆசைப்பட்டால் இப்படித்தான் கஷ்டமும் நஷ்டமும் வரும் என்பதை அன்றுடன் அவள் உணர்ந்துகொண்டாள்.




# எனது கிராமம்

தென்றல் காற்றில் கலந்திருக்கும்
பறவைகளின் இனிமையான இன்னிசை
ஆற்றில் அழகாகப் பாடிவரும்
நீரின் ஓடும் ஓசை!

பசுமையான புற்களும்
பூத்துக் குலுங்கும் பூக்களும்
மனதைக் கவரும் மரங்களும்
மகிழ்வு தரும் நல்ல நாட்டார் பாடல்களும்!

வானத்தில் வட்டமிட்டுத் திரியும் அழகிய குருவிகளும்
சுற்று முற்றிலும் வயல் வெளிகளும்
அதில் அழகாய் தெரியும் ஒற்றையடிப் பாதையும்
வரிசையான பனை மரங்களும்!

அங்கு தேன் அருந்தும் சிட்டுக்கள்
பூக்களைச் சுற்றும் வண்டுகள்
கள்ளங் கபடமற்ற மானிடர்கள்
அதுதான் எனது கிராமம்.

எச்.பாத்திமா மும்தாஸ்,
அக்/அல்/ஹம்றா மகா வித்.
ஒலுவில்-02.



# பொஸ்ஃபோரஸ் பாலம்



ஆசியாவையும் ஐரோப்பாவையும் இணைக்கும் பாலம்தான் பொஸ்ஃபோரஸ் பாலம். இது துருக்கியிலுள்ள இஸ்தான்புல்லில் அமைந்துள்ளது. அதாவது, பொஸ்ஃபோரஸ் நீரிணை மீது அமைக்கப்பட்டுள்ளதால் அதன் பெயரே பாலத்துக்கும் சூட்டப்பட்டுள்ளது. இது 'முதலாவது பொஸ்ஃபோரஸ் பாலம்' என்று அழைக்கப்படுகின்றது. ஏனெனில், பொஸ்ஃபோரஸ் நீரிணையில் மற்றுமொரு பாலமும் அமைக்கப்பட்டுள்ளது. அந்தப்பாலம் 'பெய்த் சுல்தான் மொஹமட் பாலம்' என்றழைக்கப்படுகிறது. இரும்பு உருக்குக் கோபுரங்களை (Steel Towers) அமைத்து அத்துடன் உருக்கு கேபிள்களை இணைத்து தொங்கும் வகையில் நிர்மாணிக்கப்பட்டுள்ளது. அதன் நீளம் 1,560 மீற்றர்களாகும்.

அகலம் 33.40 மீற்றர்கள், உயரம் 165 மீற்றர்களாகும். 1970 ஆம் ஆண்டு பொஸ்ஃபோரஸ் பாலத்தின் நிர்மாணப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டு 1973 ஜுன் முதலாம் திகதி நிறைவுபெற்றது. 1973 ஒக்டோபர் 30 ஆம் திகதி திறந்து வைக்கப்பட்ட இந்த பாலத்தினூடாக நாளொன்றுக்கு சுமார் இரண்டு லட்சத்துக்கு மேற்பட்ட வாகனங்கள் போக்குவரத்தில் ஈடுபடுகின்றன. உலகின் நீளமான பாலங்களில் இந்த பொஸ்ஃபோரஸ் பாலமும் ஒன்றாகும்.

ரிஸ்லா ரைஸ்தீன்,
கு/ஹிஸ்புல்லாஹ் ம.க.

# பறவைகள் பலவிதம்



**கடல் பறவைகள்:**

பல பறவைகள் உணவிற்குக் கடலையே சார்ந்துள்ளன. அவ்வாறான பறவைகள் கடல் பறவைகள் என அழைக்கப்படுகின்றன. கரையோரப் பறவைகளும் உள்ளன. அவற்றில் ஒன்றான சிப்பிதின்னிப் பறவைகள் கடல் அருகே வசித்து அங்கேயே தங்கள் உணவுகளைச் சேகரித்துக் கொள்கின்றன. கடல் பறவைகள் சமுத்திரத்தின் மேல் பறந்தபடி தமது வாழ்வை ஓட்டினாலும் முட்டையிடுவதற்கும், குஞ்சு பொரிப்பதற்கும் கடலோரத்து செங்குத்தான பாறைப்பகுதிகளுக்கே வருகின்றன.



**போர்க் கப்பல் பறவை:**

போர்க் கப்பல் பறவைகள் வெப்பமண்டலப் பகுதிகளில் வாழ்கின்றன. இவை பிற பறவைகளைத் தாக்கி அவற்றின் உணவுகளைப் பறித்து உண்ணுகின்றன. இவற்றில் ஆண் பறவைகள் தங்கள் சிவப்புத் தொண்டைப் பையை காற்றால் உப்பச் செய்து பெண் பறவைகளை ஈர்க்கின்றன.


**கென்ட் பறவை:**

கென்ட் பறவையானது, பறவைகளை ஒத்த பழக்கங்களைக் கொண்டிருப்பினும் சற்று வித்தியாசமானது. இவை பெரிய அளவான செங்குத்தான பாறைகளில் வசிக்கக்கூடியவை. எதிரிப் பறவைகளிடமிருந்து பாதுகாப்பாக வாழ இப்பறவைகள் மிக உயரத்தில் தனது இனத்துடன் கூட்டாக குடியிருக்கின்றன.

லம்யா சப்ரி,
பறகஹதெனிய தேசிய பாட.,
குருணாகலை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குறுக்கெழுத்துப் போட்டி இல.72




### மேலிருந்து கீழ்

01. பஞ்சபாண்டவர்களில் ஒருவர்.
02. அதிகாலையில் கூவும்.
03. நுட்பமான தன்மை மற்றும் திறமையை உள்ளடக்கியது. (தலைகீழ்)
04. சில உயிரினங்களை பெருமளவில் வளர்க்கும் இடம். (தலைகீழ்)
05. (பழங்கால) வீடுகளின் வாசல் கதவின் இரு புறங்களிலும் கட்டப்படும் உயரமான அமைப்பு.
06. கடல்.
07. பெரிய மிருகம்.
08. முற்காலத்தில் தண்டனை வழங்குவதற்குப் பயன்பட்டது.

### இடமிருந்து வலம்


01. தலை வைத்துத் தூங்கப் பயன்படும்.
03. 'மூலக்கருத்து' என்றும் அர்த்தப்படும். (மாறியுள்ளது)
04. 'கேள்வி' என்பதன் எதிர்ப்பதம்.
06. இடையன். (மாறியுள்ளது)
08. (பொதுவாக) மோதிரம். (மாறியுள்ளது)
09. குற்றம்.

### குறுக்கெழுத்துப் போட்டி இல.71 விடைகள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 செ | ந் | 2 தா | 3 ம | ரை | ■ |
| வ் | ■ | 4 க | த் | தி | ■ |
| வ | ■ | ம் | த | 5 மு | 6 அ |
| 7 க | டி | ■ | ள | ■ | ■ |
| ம் | ல | ப | ம் | 8 அ | ■ |
| ■ | 9 ம | ணை | ■ | ரி | 10 பா |

## இடைவெளிகளை நிரப்பி, 5 ஐ விடையாகப் பெறுக

2







'நடராஜ் அறிவுக்கு விருந்து' பகுதியிலுள்ள 1, 2, 3 ஆகிய போட்டிகளுக்கான விடைகளை தபாலட்டையில் மாத்திரம் ஒட்டி, 19.02.2014 ஆம் திகதிக்கு முன்னர் எமக்கு அனுப்பி வையுங்கள்.

நடராஜ் அறிவுக்கு விருந்து - 11
விஜய் - த.பெ.எண் 2037, கொழும்பு

1ஆம் பரிசு ரூ. 700/=
2ஆம் பரிசு ரூ. 500/=
3ஆம் பரிசு ரூ. 300/=
பரிசுப் பொதி

நடராஜ் அறிவுக்கு விருந்து போட்டிகளுக்கான விடைகளை அனுப்பும்போது, உங்கள் பெயர், வீட்டு முகவரி, தொலைபேசி இலக்கம், பாடசாலை, நகரம் என்பனவற்றை கட்டாயம் எழுதி அனுப்புங்கள்.

## நடராஜ் அறிவுக்கு விருந்து - 09 விடைகள்

**போட்டி: 01**




**போட்டி: 02**




**போட்டி: 03**

அ) 120 - CXX
ஆ) 30 - XXX
இ) 97 - XCVII
ஈ) 14 - XIV
உ) 9 - IX

## நடராஜ் அறிவுக்கு விருந்து - 09 பரிசு பெறும் அதிர்ஷ்டசாலிகள்

**1ஆம் பரிசு**
எம். இம்மத், கதுறுவெல.

**2ஆம் பரிசு**
கே. பவகௌசிகா, உவர்மலை.


**3ஆம் பரிசு**
ஷிம்ரா உஸ்மான், நாங்கல்ல.

**பாராட்டுப் பெறுவோர்:**

* எஸ். சத்தியா, ஊரெழு - மேற்கு.
* ஏ. உடையார், புத்தளம்.
* கே. திவிஷ்கான், இரத்தினபுரி.
* ஏ. சர்கவி, மல்வானை.
* ச. லக்ஷ்மிகரன், வவுனியா.
* என். வைஷி, கொழும்பு - 13.
* எஸ். ஷராஃப், ஹெம்மாதகம.
* சி. பங்கேருகன், ஆரையம்பதி.
* என். நஸ்ரின், கிண்ணியா - 03.
* எஃப். ரிஸ்வானா, மாத்தளை.

## வித்தியாசங்களில் X அடையாளமிடுக





## உங்களுக்குத் தெரியுமா?

1

01. உலகில் அதிகமாகக் கிடைக்கும் உலோகம்;
    1. தங்கம் 2. அலுமினியம் 3. செம்பு
02. நாணயக்குற்றிகள் தயாரிக்க பெருமளவில் பயன்படுத்தப்படும் உலோகம்;
    1. நிக்கல் 2.தங்கம் 3. தகரம்
03. மனிதன் உபயோகித்த முதல் உலோகம்;
    1. தங்கம் 2. செம்பு 3. பொஸ்பரஸ்

## குழம்பியுள்ள எழுத்துக்களை ஒழுங்கமைத்து, சரியான சொல்லை எழுதுக

3


sahrk
__________


shif
__________


aelwh
__________


bcar
__________

Sponsored by

NATARAJ®

Packsco Ceylon (Pvt) Ltd, P.O Box-165, Colombo-03

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org




கிளிநொச்சி - புதுமுறிப்பைச் சேர்ந்த மதியழகன் - சுகிர்தா தம்பதியரின் செல்வப் புதல்வன் ஜினோத், தனது முதலாவது பிறந்தநாளை 16.02.2014 அன்று விமர்சையாகக் கொண்டாடவுள்ளார். இவரை, பெற்றோர் மற்றும் உற்றார் உறவினர்கள் அனைவரும் கிளிநொச்சி கற்சொமி முருகனின் அருள்பெற்று பல்லாண்டு காலம் நலமுடன் வாழ வாழ்த்துகின்றனர்.



(தகவல்: யோ.மிருணாளன்)



கிளிநொச்சி தருமபுரத்தைச் சேர்ந்த ஆனந்தன்-பகீரதி தம்பதியரின் செல்வப் புதல்வன் மதுசன், தனது பதின்மூன்றாவது பிறந்தநாளை 08.02.2014 அன்று கொண்டாடினார். இவரை, குடும்பத்தினர் மற்றும் உற்றார் உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் நாகதம்பிரான் அருள்பெற்று பல்லாண்டு காலம் நலமுடன் வாழ வாழ்த்துகின்றனர்.

மாத்தளையைச் சேர்ந்த ஜீவா-கவிதா தம்பதியரின் செல்வப் புதல்வன் ஷவிந்தன், தனது நான்காவது பிறந்தநாளை 06.02.2014 அன்று கொண்டாடினார். இவரை, குடும்பத்தினர் மற்றும் உற்றார் உறவினர்கள் அனைவரும் மாத்தளை ஸ்ரீ முத்துமாரியம்பாளின் அருள்பெற்று நலமுடன் வாழ வாழ்த்துகின்றனர். (தகவல்: ஜே.ஷதுர்ஜன்)





பூவல்லையைச் சேர்ந்த நிஸார்-நஸீரா தம்பதியரின் செல்வப் புதல்வன் மொஹமட் நிஹ்லான், தனது ஏழாவது பிறந்தநாளை 30.01.2014 அன்று கொண்டாடினார். இவரை, குடும்பத்தினர் மற்றும் உற்றார் உறவினர்கள் நண்பர்கள் அனைவரும் அல்லாஹ்வின் அருள்பெற்று பல்லாண்டுகள் வாழ வாழ்த்துகின்றனர். (தகவல்: அஸ்மா)

கிளிநொச்சி -விவேகானந்த நகர் கிழக்கைச் சேர்ந்த யோகரட்ணம்-புஸ்பராணி தம்பதியரின் செல்வப் புதல்வன் வீரேந்திரா, தனது ஒன்பதாவது பிறந்தநாளை 31.01.2014 அன்று கொண்டாடினார். இவரை, குடும்பத்தினர் மற்றும் உற்றார் உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் இறைவன் அருள்பெற்று நலமுடன் வாழ வாழ்த்துகின்றனர்.

(தகவல்: யோ.துரிதா)







அனுப்ப வேண்டிய முகவரி:
கைவண்ணங்கள்
த.பெ.எண் 2037
கொழும்பு



கு.துவிஹா,
மஹிந்த பிளேஸ், கிருலப்பனை.



ரா.யஸ்வந்த்குமார்,
புனித சென்.ஜோன் பொஸ்கோ கல்.,
ஹட்டன்.



எஃப்.திஸ்பா,
வெலம்பொட மு.ம.வித்.,
வெலம்பொட.





லெ.தாணிஷ்,
கமு/சாஹிராக் கல்., கல்முனை.



ர.திலக்சன்,
யா/சென் பனடிக்ஸ்,
யாழ்ப்பாணம்.

எல்.லக்ஷிகன்,
யாழ். இந்து ஆரம்பப் பாட.,
யாழ்ப்பாணம்.



நவீன்,
இ/எ.ம்.பி./த.ம.வித்.,
இறக்குவானை.



ஃபாஹிட்,
பதுரியா ம.ம.வித்., மாவனல்லை.



ஏ.உமைமா,
பாத்திமா பாலிகா மு.ம.வித்.,
முறுதகஹமுல.



எம்.ஸஹ்வின்,
காத்தான்குடி மத்.வித்., காத்தான்குடி

# அழியும் அபாயத்தை எதிர்கொண்டிருக்கும்...

(3ஆம் பக்கத் தொடர்ச்சி)

பழங்குடியினரைப் பார்த்த அந்த சந்தர்ப்பத்தை ஞாபகப்படுத்தியவாறு ஃபூனாய் அமைப்பின் சுற்றாடல் பாதுகாப்பு நிபுணரான ஹோரே காலோஸ் மியரலஸ் கருத்துத் தெரிவித்தார்.

## ஏராளமான பழங்குடியினர்கள்

இதுபோன்றே, ஏராளமான அமெரிந்தி பழங்குடியினத்தவர்கள் அமேசன் காடுகளின் பல்வேறு பகுதிகளிலும் வசித்து வருவதாக மியரலஸ் கூறுகின்றார். இவர்கள் மட்டுமன்றி, இதுவரை இனங்காணமுடியாத-தனித்து வாழுகின்ற 100 வகையான பழங்குடியினத்தவர்கள் உலகம்





முழுவதும் வாழ்ந்து வருவதாக ஃபூனாய் அமைப்பு சுட்டிக்காட்டுகின்றது. தென் அமெரிக்கா, ஆபிரிக்கா மற்றும் தென்கிழக்கு ஆசிய தீவுகளிலேயே இப்பழங்குடியினர்கள் வசிக்கின்றனர்.

மாஷ்கோ பீரோ பழங்குடியினர் பேரு நாட்டின் தென்கிழக்குப்பகுதி அமேசன் காட்டிற்குரிய மானு தேசிய வனப் பாதுகாப்புப்பகுதியிலேயே வசிக்கின்றனர். இந்த பழங்குடி இனத்தில் சுமார் நூறு உறுப்பினர்கள் வரை உள்ளனர். இவர்களின் வாழ்க்கை முறை மிகவும் எளிமையானதாகும். பேரு அதிகாரிகளுக்குத் தெரியாமல் இந்த வனப் பாதுகாப்புப்பகுதியில் சட்ட விரோதமாக நடைபெறும் மரம் வெட்டும் செயற்பாடுகள், எண்ணெய் அகழ்வுப் பணிகள், சுற்றுலாப் பயணிகளின் வருகை என்பன அங்குள்ள பழங்குடிக் கிராமத்தினருக்கு அச்சுறுத்தலை ஏற்படுத்தி வருகின்றன. பழங்குடிக் கிராமத்திற்கு அருகில் உள்ள ஆற்றிற்கு சுற்றுலாப் பயணிகள் வருகை தந்ததன் காரணமாக ஏற்பட்ட அசௌகரியங்களை அடுத்து, அப்பகுதிக்கு சுற்றுலாப் பயணிகள் செல்லத் தடை விதிக்கப்பட்டுள்ளது. வெளியுலக மக்களுக்கு இருக்கும் பல நோய்கள் இந்த பழங்குடியினருக்கும் பரவிவிடும் என்பதனாலேயே இந்த தடை விதிக்கப்பட்டுள்ளது.

## தனிமையை விரும்பும் மாஷ்கோ பீரோ

"மாஷ்கோ பீரோ பழங்குடியினர் வெளியுலகத் தொடர்பினைப் பேண விருப்பம் இல்லாதவர்கள். அவர்கள் தனிமையான வாழ்க்கையினையே விரும்புகின்றனர். அவர்களுக்கென பிரத்தியேகமான வாழ்க்கை முறையொன்று காணப்படுகின்றது. அதில் நாம் தலையிடக்கூடாது. அத்துடன், அவர்களைப் பாதுகாப்பது எமது கடமையாகும்" என அமெரிந்தி பழங்குடியினரைப் பாதுகாப்பதற்கென ஸ்தாபிக்கப்பட்டுள்ள பேரு அரச அமைப்பின் மானிடவியல் விஞ்ஞானியான பியெட்ரஸ் ஹ்வெர்ட்டா கூறுகின்றார்.

-அஷ்விதா

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# கண்டுபிடிப்புக்கள்



அடோல்ஃப் சக்ஸ் (Adolphe Sax)
1840- பெல்ஜியம்



காற்றிசைக் கருவி



ப்ளெய்ஸ் பஸ்கல் (Blaise Pascal)
1662- பெரிஸ்




பேருந்து



வோல்ட் டிஸ்னி (Walt Disney)
1928 - அமெரிக்கா



மிக்கி மௌஸ்




ஜோசப் ப்ரியஸ்ட்லி (Joseph Priestley)
1767 - பிரிட்டன்



சோடா நீர்



ஜோன் நெ(ப்)பியர் (John Napier)
1614 - ஸ்கொட்லாந்து



மடக்கைகள்



வில்லியம் மர்டொச் (William Murdoch)
1792 - ஸ்கொட்லாந்து



எரிவாயு விளக்கு

# உயிரியல் வகைப்பாடு

## லெவென்டா



*Lamiaceae* குடும்பத்தைச் சேர்ந்த பூக்கும் தாவரமான லெவென்டா 39 இனங்களின் பேரினமாகும். இது வடக்கு மற்றும் கிழக்காபிரிக்கா, தென் மேற்கு ஆசியா, தென்கிழக்கு இந்தியா மற்றும் கெனரி தீவுகளில் அதிகளவில் காணப்படுகின்றது. இந்த லெவென்டா மலர் வணிகத்திற்காகவும் அலங்காரச் செடியாகவும் சமையல் மூலிகைகளுக்காகவும் பயன்படுகின்றது. இவை குட்டைச் செடிகளாகவும் புதர்களாகவும் வளரக்கூடியவை. லெவென்டா மலர்கள் இறகு போன்று கொத்துக் கொத்தாகப் பூக்கக்கூடியவை. இவை நீலம், ஊதா அல்லது இளஞ்சிவப்பு நிறங்களில் பூக்கின்றன. இந்தப் பூக்களில் இருந்து எண்ணெய் தயாரிக்கப்படுகின்றது.

| | |
|---|---|
| *ராச்சியம்* | : தாவரம் |
| *(தரப்படுத்தப்படாத)* | : பூக்கும் தாவரம் |
| *(தரப்படுத்தப்படாத)* | : இருவித்திலைத் தாவரம் |
| *(தரப்படுத்தப்படாத)* | : *Asterids* |
| வரிசை | : *Lamiales* |
| குடும்பம் | : *Lamiaceae* |
| துணைக்குடும்பம் | : *Nepetoideae* |
| பேரினம் | : *Lavandula L.* |

## கொஸ்மொஸ்



*Asteraceae* குடும்பத்தின் கொஸ்மொஸ் மலர்கள் 20-26 இனங்களின் பேரினமாகும். கொஸ்மொஸ் பூ இனங்கள் பெரும்பாலும் மெக்ஸிகோ, ஃப்ளோரிடா, தெற்கு அமெரிக்கா, அரிசோனா, மத்திய அமெரிக்கா, தெற்கு பராகுவே மற்றும் வட தென் அலாஸ்கா பகுதிகளில் புதர்க்காடுகளாக வளரக்கூடியவை. இவை போயர் போரின் போது மெக்ஸிகோவிலிருந்து ஏனைய இடங்களுக்கு இறக்குமதி செய்யப்பட்டன. 0.3-2 மீற்றர் உயரம் வரையில் வளரக்கூடிய கொஸ்மொஸ் பூவினம் அழிவில்லாதது. இதன் மலர்கள் பல நிறங்களில் அழகழகாய் பூக்கக்கூடியவை. அநேகமான மலர்த்தோட்டங்களில் அலங்காரச் செடியாக கொஸ்மொஸ் பூக்கள் காணப்படுகின்றன. இதில் பல கலப்பினங்களும் அடங்குகின்றன.

| | |
|---|---|
| *ராச்சியம்* | : தாவரம் |
| *(தரப்படுத்தப்படாத)* | : பூக்கும் தாவரம் |
| *(தரப்படுத்தப்படாத)* | : இருவித்திலைத் தாவரம் |
| *(தரப்படுத்தப்படாத)* | : *Asterids* |
| வரிசை | : *Asterales* |
| குடும்பம் | : *Asteraceae* |
| துணைக்குடும்பம் | : *Asteroideae* |
| பேரினம் | : *Cosmos Cav.* |

## அந்தூரியம்



**1000** பூக்கும் தாவரங்களின் *Araceae* குடும்பத்தின் மிகப்பெரிய ஒரு பேரினம் அந்தூரியம் ஆகும். இதன் பொதுப் பெயர்கள் Tailflower, Flamingo Flower மற்றும் Laceleaf ஆகும். இந்த பேரினத்தின் பூர்வீகம் அமெரிக்காவாகும். இது வடக்கு ஆர்ஜென்டீனா, வடக்கு மெக்ஸிக்கோ மற்றும் கரீபியன் தீவுகளிலிருந்து பிற இடங்களுக்கு விநியோகிக்கப்படுகின்றது. அந்தூரியம் பூக்கள் பெரும்பாலும் வணிக நோக்கிற்காகவே பயிரிடப்படுகின்றது. இப்பூக்கள் அதிகளவு கொள்வனவு செய்யப்படுவதனால், வீட்டுத் தோட்டங்களிலும் பயிரிடப்பட்டு விற்பனை செய்யப்படுகின்றன. மேலும், இவை அலங்காரப் பூக்களாகவும் உள்ளன.

| | |
|---|---|
| *ராச்சியம்* | : தாவரம் |
| *(தரப்படுத்தப்படாத)* | : பூக்கும் தாவரம் |
| *(தரப்படுத்தப்படாத)* | : ஒருவித்திலைத் தாவரம் |
| வரிசை | : *Alismatales* |
| குடும்பம் | : *Araceae* |
| பேரினம் | : *Anthurium schott.* |

## யூஃபோபியா மிலீ



மடகஸ்கரை பூர்வீகமாகக் கொண்ட பூக்கும் தாவரமான யூஃபோபியா மிலீ பண்டைய காலத்தில் மத்திய கிழக்கு நாடுகளில் அறிமுகப்படுத்தப்பட்டது என கருதப்படுகின்றது. இவை அடர்த்தியாக வளரக்கூடிய புதர்ச்செடிகளாகும். இதன் மலர்கள் சிறிய அழகிய வடிவங்களில் பூக்கக்கூடியவை. சிவப்பு, இளஞ்சிவப்பு, வெள்ளை போன்ற நிறங்களில் பூக்கும் இவை மிதமான விஷத்தன்மை கொண்டவை. இதன் பூ மற்றும் இலைகளை பறிக்கும்போது பிசுபிசுப்பான வெள்ளைத் திரவம் வெளிப்படும். முட்களையுடைய இப்பூவினம் Crown of thorns, Christ Plant, Christ thorn என்று அழைக்கப்படுகின்றது.

| | |
|---|---|
| *ராச்சியம்* | : தாவரம் |
| பிரிவு | : *Magnoliophyta* |
| வகுப்பு | : *Magnoliopsida* |
| வரிசை | : *Malpighiales* |
| குடும்பம் | : *Euphorbiaceae* |
| பேரினம் | : *Euphorbia* |
| இனம் | : *E.milii* |


(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாரணா ஆலோசகனை

சாரணர் தலைவர்களுக்கு வழங்கப்படும் பயிற்சிகள், படிமுறைகள் பற்றிய விடயங்களை விரிவாகத் தரமுடியுமா?

முதலில் நீங்கள் சாரணர் தலைவர் பயிற்சி நெறியினைப் பெற்றுக்கொள்ள ஆர்வம் கொண்டிருப்பது முக்கியமானதாகும். உங்களுக்கு குறைந்தது 18 வயது இருக்க வேண்டும். கல்வித் தகைமை குறைந்தது க.பொ.த. சாதாரண தரம் மற்றும் உயர்தரத்தில் சித்திபெற்றிருத்தல் வேண்டும். ஆசிரியர்கள் இப்பயிற்சியினைப் பெறுவதினால் அவர்களுடைய வான்மைத்துவம் மற்றும் பதவி உயர்வுகளுக்கு நன்மை உண்டு. ஏனையவர்களும் இப்பயிற்சியைப் பெற்றுக்கொள்ள விரும்பின், அவர்கள் ஒரு பாடசாலையில் தொண்டாற்றக்கூடியவராக இணைந்துகொள்ள வேண்டும். அத்துடன், கீழ்வரும் விடயங்கள் முக்கியமானவையாக கவனத்தில் கொள்ளப்பட வேண்டும். அந்தவகையில் பின்வரும் அட்டவணையை கருத்தில் கொள்க.





| பயிற்சி | நியமனப்பத்திரம் | செல்லுபடியாகும் காலம் | சீருடை |
|---|---|---|---|
| கலைக்கூறு I | அனுமதிக்கான அங்கீகாரக் கடிதம் (Letter of Authority) | 2 வருடகாலம் அதன்பின் புதுப்பிக்கப்படமாட்டாது | பூரண சீருடை, அவர்களின் துருப்பு கழுத்துப்பட்டி |
| கலைக்கூறு II | அங்கீகரிக்கப்பட்ட ஆணைப்பத்திரம் (WARRANT) | 1 வருடகாலம் மட்டும் அதன்பின் மீண்டும் புதுப்பிக்கப்பட வேண்டும் | பூரண சீருடை, அவர்களின் துருப்பு, கழுத்துப்பட்டி, கில்வெல் வொக்கிள் |
| கலைக்கூறு IV | ஆணைப்பத்திரம் (WARRANT) | ஆணைப்பத்திரம் ஒவ்வொரு வருடமும் புதுப்பிக்க வேண்டும். | பூரண சீருடை, கில்வெல் கழுத்துப்பட்டி, கில்வெல் வொக்கிள் |
| கலைக்கூறு V | ஆணைப்பத்திரம் (WARRANT) | ஆணைப்பத்திரம் ஒவ்வொரு வருடமும் புதுப்பிக்க வேண்டும். | பூரண சீருடை, கில்வெல் கழுத்துப்பட்டி, கில்வெல் வொக்கிள், நட்சத்திர சின்ன மணிமாலை |

✱ கலைக்கூறு I பயிற்சிகள் 2 தினங்கள் நடைபெறும். இதனை 3 மாதத்திற்குள் பூரணப்படுத்தல் வேண்டும். பயிற்சி பெறும் காலவர்ரயறை 2 வருடங்கள்.

✱ கலைக்கூறு II பயிற்சி பகல் 04, இரவு 03 தினங்கள் நடைபெறும். இதனை 6 மாதத்திற்குள் பூரணப்படுத்தல் வேண்டும். பயிற்சி பெறும் காலவரை 2 வருடங்களினுள் கலைக்கூறு II பயிற்சிக் கையேடு கொடுக்கப்படும்.

✱ கலைக்கூறு III பயிற்சி ஆலோசனை மற்றும் வழிப்படுத்தல் நடைபெறும். இதனை 6 மாதத்திற்குள் பூரணப்படுத்தல் வேண்டும். பயிற்சி பெறும் காலவரை 2 வருடங்களினுள் கலைக்கூறு III பயிற்சிக் கைநூல் கொடுக்கப்படும்.

✱ கலைக்கூறு IV பயிற்சி பகல் 08, இரவு 07 தினங்கள் நடைபெறும். இதனை 6 மாதத்திற்குள் பூரணப்படுத்தல் வேண்டும். பயிற்சி பெறும் காலவரை 3 வருடங்களினுள் கையேடு கொடுக்கப்படும். இப்பயிற்சி நட்சத்திர சின்னப்பயிற்சி. இதனைப் பெறுவதாயின், 21 வயது பூர்த்தி அடைந்தவராக இருக்க வேண்டும்.

✱ கலைக்கூறு V பயிற்சி ஆலோசனை மற்றும் வழிப்படுத்தல் நடைபெறும், இக்காலத்தில் ஒப்படைகள் ஆலோசனை வழங்குபவர் ஊடாக தேசிய பயிற்சி ஆணையாளருக்கு அனுப்புதல் வேண்டும். இதனை 6 மாதத்திற்குள் பூரணப்படுத்தல் வேண்டும். பயிற்சி பெறும் காலவரையறை 3 வருடங்கள்.

இதன் பின்னர் தேசிய பயிற்சி ஆணையாளரின் நேர்முகப்பரீட்சையின் பின்பே நட்சத்திர சின்னம் வழங்குவது தீர்மானிக்கப்படும் என்றும் 24 வயது பூர்த்தியின் பின்னர்தான் நட்சத்திர சின்னம் வழங்கப்படும். இது தேசிய பயிற்சி ஆணையாளரினால் அங்கீகரிக்கப்பட்ட நாளில் இருந்து செல்லுபடியாகும். ஒரு பிரிவில் நட்சத்திர சின்னம் பெற்றவர்கள் இன்னொரு பிரிவில் (குருளை சாரணர், சாரணர், திரி சாரணர்) பயிற்சி பெறுவதாயின், நட்சத்திர சின்னம் பெற்ற பிரிவில் இரு வருட சேவை செய்தபின்னர் தான் மற்றைய பிரிவின் கலைக்கூறு I இல் பயிற்சி பெறமுடியும். இதன் பின் இது சம்பந்தமான பிரிவில் கலைக்கூறு I பயிற்சி முடிந்தபின் அனுமதிக்கடிதத்தைப் பெற்றுக்கொள்ளலாம்.

(அறிவுரை தொடரும்...

**அடுத்த (வாரம்) வருவது....**

அனுமதிக்கான அங்கீகாரக் கடிதம், (Letter of Authority)
அங்கீகரிக்கப்பட்ட ஆணைப்பத்திரம் (WARRANT) இவை சாரணர்களுக்கு முக்கியமா?
அல்லது சாரணர் தலைவர்களுக்கு மட்டும் முக்கியமா? இது பற்றிய விபரங்களைத் தருவீர்களா?

## விஜய் சாரணர் உலகம்

### சாரணர் இயக்க உலக அமைப்பு WOSM (World Organization of the Scout Movement)

01 ஒகஸ்ட் 1907 இல் இங்கிலாந்தில் Brownsea தீவில் பேடன் பவல் அவர்களால் முதலாவது பரிசோதனை முகாம் நிறுவப்பட்டது. இவ்வமைப்பில் உறுப்பினராகச் சேர்ந்த நாடுகளும் அங்கத்தவர்களது விபரங்களும்.

| நாடு | சாரண உறுப்பினர் | WOSM இல் சேர்ந்த ஆண்டு | நிறுவப்பட்ட ஆண்டு |
|---|---|---|---|
| புருண்டி | 28,559 | 1979 | 1940 |







இலங்கைக்கு விஜயமொன்றை மேற்கொண்ட ஆசிய பசுபிக் பிராந்தியத்தின் சாரணர் இயக்கப் பணிப்பாளரான ஜே.ஆர்.பங்கிலினன் அவர்கள் பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தை வந்தடைந்த போது, ஆசிய பசுபிக் பிராந்திய சாரணர் இயக்க செயற்குழு உறுப்பினரான ஜனாபிரித் பெர்னாண்டோ அவர்களும் (சர்வதேச ஆணையாளர், இலங்கை சாரணர் சங்கம்) சிராஸ் சாலின் அவர்களும் (பிரதி பிரதம ஆணையாளர், இலங்கை சாரணர் சங்கம்) அவரை வரவேற்பதை படங்களில் காணலாம்.

## வர்ணங்கள் மிகு கற்கள்

குருளை சாரணர்கள் தமது கைவேலைப்பாடுகளை, சிருஷ்டிப்புத் தன்மையை வெளிப்படுத்துவதற்கு ஓய்வான நேரங்களைப் பயன்படுத்தலாம். இவற்றின்மூலம் உங்கள் படைப்புத்திறனை மேம்படுத்திக்கொள்ளவும் முடியும். இங்குள்ள படத்தைப் பார்த்தீர்களா? எவ்வளவு அழகான வர்ணங்கள் மிகு கைவேலைகள் இதில் நிறைந்துள்ளன.


முதலில் ஒவ்வொரு வடிவிலான சிறிய கற்களை சேகரித்துக்கொள்ளுங்கள். அந்த கற்களின்மீது அழகிய வர்ணங்களைக் கொண்டு இவ்வாறு முக அமைப்புக்களை வரைந்துகொள்ளுங்கள். நிச்சயம் இது உங்கள் கலைத்திறனை வெளிப்படுத்தும். முயற்சித்துப் பாருங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகின் மிகப் பெரிய விமானம் தாங்கிக் கப்பல்கள் 10

உலக நாடுகளின் படைபலத்தினையும் யுத்த ஆற்றலையும் வெளிப்படுத்தும் ஒரு விடயமாக 'Aircraft Carriers' எனப்படும் 'விமானம் தாங்கிக் கப்பல்களைக் குறிப்பிடலாம். தற்போது மிக முன்னேறிய நாடுகள் பலவற்றில் இந்த விமானம் தாங்கிக் கப்பல்கள் உள்ளன. இவற்றில் அதிகளவான கப்பல்கள் அமெரிக்காவிடமே உள்ளன. அவற்றுள் பெரும்பாலானவை அணுசக்தியில் இயங்கும் ஆற்றல் கொண்டவை.



## 01 நிமிட்ஸ் க்ளாஸ் - அமெரிக்கா

மொத்த நிறை மெற்றிக் தொன் 1,00,020

நிமிட்ஸ் ரகத்திற்குரிய முதலாவது கப்பல் 1975 இல் தயாரிக்கப்பட்டது. அனேகமாக அனைத்துக் கப்பல்களும் 50 ஆண்டுகள் பயன்படுத்தக்கூடிய வாறே தயாரிக்கப்படுகின்றன. 332.8 மீற்றர் நீளம்கொண்ட இக்கப்பலில் 60 விமானங்களை தரித்து நிறுத்தலாம். 3,200 பேருக்கு தங்குமிட வசதிகள் உண்டு. அணுசக்தியில் இயங்கும் இது, 30 நொட்டிலும் அதிக வேகம் கொண்டது.



## 02 அட்மிரல் குஸ்நெட்சோவ் ரஷ்யா

மொத்த நிறை மெற்றிக் தொன் 55,200

இது ரஷ்யாவில் இயக்கத்தில் உள்ள ஒரே ஒரு விமானம் தாங்கிக் கப்பலாகும். 14,700 சதுர கி.மீற்றர் விமான ஓடுதளம் இதில் காணப்படுகின்றது. 2,500 இற்கும் அதிகமானவர்கள் இக்கப்பலில் தங்கியிருக்கக்கூடிய வசதிகள் உண்டு. நீராவி என்ஜின் உதவியுடன் இயங்கும் இதன் அதிகபட்ச வேகம் 32 நொட் ஆகும்.



## 03 லிஆஒனிங் சீனா

மொத்த நிறை மெற்றிக் தொன் 67,500

இந்த ரகத்தினைச் சேர்ந்த ஒரே ஒரு கப்பலே சீனாவிடம் உள்ளது. இது ரஷ்யாவின் தயாரிப்பாகும். 1998 இல் கொள்வனவு செய்யப்பட்டு புதுப்பிக்கப்பட்டுள்ளது. நீராவி என்ஜின் உதவியுடன் செயற்படும் இக்கப்பலில், ஒரே தடவையில் 50 விமானங்களைத் தரித்து நிறுத்த முடியும்.



## 04 சார்ள்ஸ் டி கோல் பிரான்ஸ்

மொத்த நிறை மெற்றிக் தொன் 42,000

பிரான்ஸ் கப்பல்களில் விமானங்களை தரை இறக்கக்கூடிய வசதி கொண்ட முதலாவது விமானம் தாங்கிக் கப்பல் இதுவாகும். 40 ஹெலிகொப்டர்கள் மற்றும் விமானங்களைத் தரித்து நிறுத்த இங்கு இடவசதிகள் உண்டு. 2,000 பேர் வரை தங்கி இருக்கக்கூடிய வசதிகள் கொண்ட இக்கப்பலின் வேகம் 27 நொட் ஆகும்.



## 05 சாவோ போலோ பிரேசில்

மொத்த நிறை மெற்றிக் தொன் 32,800

1963 வரை பிரான்ஸ் கடற்படை பயன்படுத்திய க்ளெமென்கியூ ரகத்தைச் சேர்ந்த இக்கப்பலை, 2000 ஆம் ஆண்டில் பிரேசில் கொள்வனவு செய்திருந்தது. 1920 பேர் தங்கியிருக்கக்கூடிய வசதிகள் இதில் உண்டு. 39 விமானங்களை இதில் தரித்து நிறுத்தலாம். இதன் வேகம் 32 நொட் ஆகும்.



## 06 கேவோர் இத்தாலி

மொத்த நிறை மெற்றிக் தொன் 30,000

இத்தாலி கடற்படைக்குரிய இந்தக் கப்பலின் விமான ஓடுதளம் 232.6 மீற்றர் நீளம் கொண்டது. அகலம் 34.5 மீற்றராகும். 1,292 பேர் தங்கியிருக்கக்கூடிய வசதிகள் இதில் உண்டு. Gas டர்பைனின் உதவியுடன் இயங்கும் இதன் அதிகபட்ச வேகம் 29 நொட் ஆகும்.



## 07 INS விராட் இந்தியா

மொத்த நிறை மெற்றிக் தொன் 28,700

இக்கப்பலானது, தற்போது உலகில் உள்ள Centaur ரகத்தினைச் சேர்ந்த மிகப் பழைய விமானம் தாங்கிக் கப்பலாகும். பிரித்தானியாவைச் சேர்ந்த இந்தக் கப்பல், 1959 இல் தயாரிக்கப்பட்டது. 30 விமானங்களை தரித்து நிறுத்தக்கூடிய வசதிகள் இதில் காணப்படுகின்றன. 1,350 பேர் இங்கு தங்கியிருக்க முடியும். நீராவி என்ஜின் மூலம் செயற்படும் இதன் அதிகபட்ச வேகம் 28 நொட் ஆகும்.

1 நொட் = மணிக்கு 1.852 கி.மீற்றர்



## 08 HMS இல்லஸ்ட்ரியஸ் (R06) பிரித்தானியா

மொத்த நிறை மெற்றிக் தொன் 22,000

இன்விசிபல் ரகத்தைச் சேர்ந்த உலகின் முதலாவதும் ஒரே ஒரு கப்பலும் இதுவாகும். டீசல் என்ஜின்மூலம் செயற்படும் இக்கப்பலின் அதிகபட்ச வேகம் 30 நொட் ஆகும்.



## 09 கியுசிப்பி கரிபால்டி (551) இத்தாலி

மொத்த நிறை மெற்றிக் தொன் 13,850


இத்தாலி நிறுவனம் ஒன்று தயாரித்த இக் கப்பலானது, மிகவும் நெகிழ்வுத் தன்மை கொண்டது. இதில் 2,500 சதுரமீற்றர் பரப்பளவு கொண்ட ஓடுதளம் காணப்படுகின்றது. Gas டர்பைன்னின் உதவியுடன் செயற்படுகின்றது. இதன் அதிகபட்ச வேகம் 30 நொட் ஆகும்.



## 10 HTMS ச்சக்ரி நருபெட் தாய்லாந்து

மொத்த நிறை மெற்றிக் தொன் 11,486

ஸ்பெய்னின் கப்பல் நிறுவனம் ஒன்றினால் தயாரிக்கப்பட்ட இந்த விமானம் தாங்கிக் கப்பல், 1997 இல் தாய்லாந்து கடற்படையுடன் இணைந்துகொண்டது. 455 பேர் இங்கு தங்கி இருப்பதற்கான வசதிகள் உண்டு. டீசல் உதவியுடன் பயணிக்கும் இதன் வேகம் 26 நொட் ஆகும்.





### விமானம் தாங்கிக் கப்பலின் வடிவமைப்பு

உலகில் தயாரிக்கப்பட்டுள்ள விமானங்களைத் தரை இறக்கக்கூடிய வசதி கொண்ட இத்தகைய கப்பல்கள் அனைத்தும் ஒரே தன்மை கொண்டவை. எனினும், ஒவ்வொரு நாட்டின் வசமுள்ள தொழில்நுட்ப வசதிகளுக்கு ஏற்ப, பாதுகாப்பு உபாயங்கள் ஒன்றுக்கொன்று வேறுபடும்.


விமானங்களைத் தரை இறக்குதல் மற்றும் ஏவுதல் ஆகியவற்றுக்குப் பயன்படுத்தும் முறைகளின் அடிப்படையில், விமானம் தாங்கிக் கப்பல்கள் மூன்று வகைகளாகப் பிரிக்கப்படுகின்றன.


**CATOBAR (கெடோபார்)**
Catapult - Assisted Take - Off But Arrested Recovery


**STOBAR (ஸ்டோபார்)**
Short Take Off But Arrested Recovery

**STOVL (ஸ்டோவல்)**
Short Take Off Vertical - Landing

### தரை இறக்கப்படும் விமானங்கள்



### USS ஜோர்ஜ் வொஷிங்டன்

நிமிட்ஸ் ரகத்தைச் சேர்ந்த விமானங்களைத் தரை இறக்கக்கூடிய விமானம் தாங்கிக் கப்பல் ரகங்களில், [illegible]9 இல் அறிமுகமான புதிய தயாரிப்பாக இதனை குறிப்பிடலாம். Northrop Grumman Newport [illegible]ws நிறுவனம் தயாரித்த இந்த கப்பலுக்கான செலவு 6.2 பில்லியன் அமெரிக்க டொலர்களாகும். ஒரு தடவைக்கு அணுசக்தி எரிபொருளை நிரப்பினால், 20 ஆண்டுகள் வரை கப்பலை பயணிக்கச் செய்ய முடியும். கட்டுப்பாட்டு அறை எனப்படும் 'ஐலன்ட்' பகுதியில் நவீன ரேடார் தொகுதி, உயர் தொடர்பாடல் தொகுதி மற்றும் ஊடுருவிப் பார்க்கக்கூடிய பாதுகாப்புக் கண்ணாடி என்பன உள்ளன.

2013 மே 14 ஆம் திகதி முதன்முதலாக ஓட்டுநர் அற்ற ட்ரோன் விமானமொன்று இந்தக் கப்பலில் இருந்து செலுத்தப்பட்டது.

இரண்டாம் உலகப் போரில் அழிவுக்குள்ளான இத்தகைய கப்பல்களின் எண்ணிக்கை 44



அமெரிக்காவின் நிமிட்ஸ் க்ளாஸ் (Nimitz Class) ரக கப்பலுக்குப் பதிலாக எதிர்வரும் காலங்களில் அறிமுகம் செய்யப்படவுள்ள Gerald R.Ford Class ரக விமானம் தாங்கிக் கப்பலின் நிர்மாணப்பணிகள்

-பிரியா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# ‘சுவிங்கம்’ மெல்லுவதால் ஞாபக சக்தி குறையுமாம்!

## ஆய்வுகள் தெரிவிக்கின்றன



சுவிங்கம் மெல்லுவதால் (சப்புவதால்) ஞாபகசக்தி பாதிக்கப்படுவதாக புதிய ஆய்வொன்றின்மூலம் தெரிய வந்துள்ளது. இங்கிலாந்தின் கார்டிப் பல்கலைக்கழகத்தின் ஆராய்ச்சியாளர்கள் மேற்கொண்ட ஆய்விலேயே இந்த உண்மை தெரிய வந்துள்ளது.

சுவிங்கம் மெல்லும் பழக்கம்



இல்லாதவர்களைவிட, சுவிங்கம் மெல்லும் பழக்கமுள்ளவர்கள் எழுத்துக்களையும் எண்களையும் ஞாபகத்தில் வைத்திருப்பதற்கு பெரிதும் கஷ்டப்படுகின்றனர் என்று இந்த ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர். சுவிங்கத்தை மெல்லும்போது ஏற்படும் அசைவானது, தொடர்ச்சியான விடயங்களை நினைவில் வைத்திருக்கும் மூளையின் ஞாபகத்திறனைப் பாதிக்கக்கூடும் என்றும் குறிப்பிடப்படுகின்றது. கை, கால், விரல்களை நொடிக்கும் பழக்கம் போன்று சுவிங்கம் மெல்லும் தொடர்ச்சியான செயல் குறுகிய கால ஞாபகத் திறனில் குறுக்கிட்டு அதைப் பாதிக்கின்றதாம்.

சில காலங்களுக்கு முன்னர் மேற்கொள்ளப் பட்டிருந்த ஆய்வொன்றின்போது சுவிங்கம் மெல்லுவது ஒருவரது ஞாபகத் திறனைக் கூட்டும் என்றும் மூளைத் திறனை ஊக்குவிக்கும் என்றும் கூறப்பட்டிருந்த போதிலும் அந்த ஆய்வின் முடிவுகள் தவறானது என்பதை தற்போதைய புதிய ஆய்வுகள் உறுதிப்படுத்தியுள்ளன.

குறிப்பாக, வார்த்தைகள் சார்ந்த ஞாபகத்திறனில் சுவிங்கம் போன்ற இதர செயற்பாடுகள் குறிக்கிடுவதால் இயல்பான செயற்பாட்டை அது பாதிக்கச் செய்வது கண்டறியப்பட்டுள்ளதாக இந்த ஆய்வில் ஈடுபட்டவர்களுள் ஒருவரான மிக்சைல் கோஸ்லோவ் என்பவர் தெரிவித்துள்ளார்.

## இன்னுமொரு கொசுறு தகவல்

**மாணவர்களும் சரி, இளம் பருவத்தினரும் சரி அநேகர் ‘சுவிங்கம்’ சாப்பிடுவதைக் கண்டுள்ளோம். உண்மையில் சில சந்தர்ப்பங்களில் இதுவோர் ஒழுக்க சீலமற்ற செயலாகவும் கருதப்படுகின்றது. உங்களில் எத்தனை பேருக்குத் தெரியும் சுவிங்கம் மெல்லுதலானது, எதிரே இருப்பவரை அசட்டை செய்யும் ஒழுக்கமற்ற தன்மையாகவே கருதப்படுகிறது என்று... எனவே, இதனை நாம் கூடிய வரையில் தவிர்ப்பதே நலமாகும்.**

# பென்ஸிலில் HB என்றால் என்ன?




பென்சில் வாங்கும்போது பென்சிலின் மேல் புறத்தில் எச் பி (HB) என்று குறிப்பிடப்பட்டிருக்குமே... அது என்ன என்று உங்களுக்குத் தெரியுமா? இதில் H என்றால் 'Hard' என்பதையும் B என்றால் 'Black' என்பதையுமே குறிக்கின்றது. அதாவது பென்ஸிலில் உள்ள ‘காரீயம்’ எந்தளவிற்கு உறுதியாக உள்ளது, எந்தளவிற்கு கறுப்பாக உள்ளது என்பதை உறுதிப்படுத்தும் அடையாள எழுத்துக்களே அது. எனவே, Hard Black என்பதன் சுருக்கக் குறியீடாகவே HB கருதப்படுகின்றது.

இப்பத்திரிகை கொழும்பு - 2, இல. 08, ஹுனுப்பிட்டிய குறுக்கு வீதி, விஜய நியூஸ்பேப்பர்ஸ் நிறுவனத்தினால் 2014, பெப்ரவரி மாதம் 12 ஆம் திகதி புதன்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது.
Printed and Published by Wijeya Newspapers Ltd. No. 8, Hunupitiya Cross Road, Colombo - 02, on Wednesday February 12, 2014.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org